PARAPARAPPU CHEITHI
Tamil Fortnightly

# பரபரப்பு செய்தி

மாதமிருமுறை இதழ்
புலனாய்வு இதழ்களில் புதிய பரிணாமம்

Volume : 27 ● Issue : 12 ● 2025 September 16-30 ● மலர் - 27 ● இதழ் - 12 ● 2025 செப்டம்பர் 16-30 ● ₹15

## சசிகலா போட்ட போன்கால்! எழுந்து நின்று பேசிய 'மணி'கள்!!





# மிஸ்டர் எடப்பாடி கபர்தார்! அரற்றிய அமித்ஷா!!

## கொடநாடு டாக்குமெண்ட்ஸ் மர்மங்கள்!!

# சசிகலா போட்ட போன்கால்! எழுந்து நின்று பேசிய 'மணி'கள்!!

**அ.தி.மு.க ஒன்றிணைய வேண்டும் என்ற கருத்துக்கள் நாளுக்கு நாள் வலுத்து வருகிறது. அ.தி.மு.க மூத்த பிரமுகர் செங்கோட்டையன் அக்கட்சியிலிருந்தே நீக்கப்பட்ட நிலையில், அவர் தொடர்ந்து அவருடைய நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளார்.**



அ.தி.மு.க தொண்டர்கள் கருத்தையே தான் பிரதிபலித்ததாகவும், அது புரிய வேண்டியவர்களுக்கு புரியும் என்று அ.தி.மு.க முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

ஈரோடு கோபிச்செட்டிபாளையத்தில் அண்ணா பிறந்தநாள் நிகழ்ச்சியில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களுடன் பேசிய செங்கோட்டையன், அண்ணாவின் பெயரால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை எம்.ஜி.ஆர் உருவாக்கினார். ஜெயலலிதா அதனை கட்டிக் காத்து வளர்த்தார். என்னை பொருத்தவரை எம்.ஜி.ஆர், ஜெயலலிதாவின் கனவை மீண்டும் ஆட்சியில் அமர வேண்டும் என்ற நோக்கத்தோடு அன்றைக்கு நான் மனம் திறந்து பேசினேன். இந்த கருத்துக்கு எம்.ஜி.ஆர், ஜெயலலிதா விசுவாசிகள் மத்தியில் பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது. அவர்களின் நோக்கம் வெற்றி பெற வேண்டும்.

அ.தி.மு.க ஒன்றிணையும் விவகாரத்தில் எம்.ஜி.ஆர், ஜெயலலிதாவின் கனவு நிறைவேற வேண்டும் என்ற நோக்கத்தில்தான் செப்டம்பப் 5.ல் அந்த கருத்தையே நான் பிரதிபலித்தேன். தொண்டர்கள், மக்களின் கருத்துகளையே பேசினேன். இதை புரிய வேண்டியவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அது அவர்களுக்கும் புரியும் என்று கூறியுள்ளார்.

இந்த சூழ்நிலையில் இக்கட்டான சூழலில் சிறைக்குச்செல்லுமுன் எடப்பாடியை முதல்வராக்கி



வேலுமணி



தங்கமணி



செங்கோட்டையன்



நயினார் நாகேந்திரன்

அ.தி.மு.க ஆட்சியை காப்பாற்றிக்கொடுத்துவிட்டு வெகுஅமைதியாக இருந்த சசிகலா, தற்போது அடிக்கடி பிரஸ்மீட் கொடுத்து வருகிறார்.

விவரமறிந்த அரசியல் பார்வையாளர்கள் சசிகலா என்ற பெண்ணின் சக்தியை இன்னமும் பலர் உணரவில்லை. அ.தி.மு.கவை காப்பாற்ற அவர் என்னவெல்லாம் செய்து கொண்டிருக்கிறார் என்பதெல்லாம் வெளியில் தெரியாமல் கனகச்சிதமாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் ஓய்வு பெற்ற முன்னாள் போலீஸ் அதிகாரிகள் கொண்ட ஆறு பேர் டீம் அ.தி.மு.க ஒன்றிணைய வலியுறுத்தி சின்னம்மாவின் உத்தரவுப்படி தமிழகமெங்கும் சுற்றுப்பயணம் செய்து அ.தி.மு.க முன்னாள் அமைச்சர்களை சந்தித்து வருகிறார்கள்.

கடந்த பத்து நாட்களுக்கு முன் தங்கமணி, வேலுமணி உட்பட ஆறு அ.தி.மு.க முன்னாள் அமைச்சர்களைச்சந்தித்த இந்த போலீஸ் டீம், அம்மா பேசுகிறார் என்று போனை கொடுத்துள்ளனர். போனில் பேசியவர் நான் சசிகலா பேசுகிறேன் என்றவுடன் எழுந்து நின்று அம்மா... வணக்கம்மா... சரிங்கம்மா... சரிங்கம்மா...! என்று மரியாதை கலந்த பயப்பணிவுடன் பேயிருக்கிறார்கள்.

ஏற்கெனவே அ.தி.மு.க அவைத்தலைவராக உள்ள தமிழ்மகன் உசேனும் அடிக்கடி சசிகலாவுடன் பேசிவருகிறார். இதனையறிந்த எடப்பாடி, உசேனுடன் சரியாகப்பேசுவதில்லை என்ற தகவலும் அவ்வப்போது காதில் விழுந்து கொண்டிருக்கிறது.

செங்கோட்டையன் அடிக்கடி பிரஸ்மீட் வைத்து பீதியைக்கிளப்பி வருவதாலும், ஒற்றுமை கோஷம் ஒவ்வொரு தொண்டர்கள் மத்தியிலும் எதிரொலித்து வருகிறது.

பி.ஜே.பி ஆதரவாளராக கருதப்படும் பத்திரிக்கையாளர் ரங்கராஜ் பாண்டேவும், அ.தி.மு.கவில் அனைவரும் ஒன்றாக சேர்வார்கள் என்று அதிரடியாக தெரிவித்து வருகிறார்.

தனக்கு மிகவும் நெருக்கமான போலீஸ் அதிகாரிகளுடன் பேசி வரும் முன்னாள் அமைச்சர் வைத்தியலிங்கம், விரைவில் அ.தி.மு.கவில் அனைவரும் ஒன்றிணைவார்கள்! என்றே பேசி வருகிறார். சில தினங்களுக்கு முன் செய்தியாளர்களைச்சந்தித்த தமிழக பி.ஜே.பி தலைவர் நயினார் நாகேந்திரன், விரைவில் அமித்ஷா ஓ.பி.எஸ் சந்திப்பு நிகழும்!என்று கூறியிருக்கிறார்.

எனவே, வரும் அக்டோபர் 30 க்குப்பிறகு அ.தி.மு.கவில் பலரும் எதிர்பாராத மாற்றங்கள் சசிகலா மூலம் நிகழும் என்று நமக்குக் கிடைத்த உறுதியான தகவல்கள் தெரிவிக்கின்றன. ■

# மிஸ்டர் எடப்பாடி கபர்தார்! அரற்றிய அமித்ஷா!!

## கொடநாடு டாக்குமெண்ட்ஸ் மர்மங்கள்!!

**அதிமுக பொதுச் செயலாளரும், தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி நேற்று டெல்லி பயணம் மேற்கொண்டார். துணை குடியரசுத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணனுக்கு வாழ்த்து தெரிவிப்பதற்காகவே அவர் டெல்லி சென்றதாகச் சொல்லப்பட்டது. ஆனால் அமித்ஷாவை அவர் சந்தித்துப் பேசியது பல்வேறு கேள்விகளை எழுப்பியது. இந்த நிலையில் அமித்ஷாவிடம் எடப்பாடியிடம் பேசியது என்ன?**

அதிமுக பொதுச்செயலாளரும், தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி கடந்தசெப்டம்பர் 17 ந்தேதி டெல்லியில், பாஜக மூத்த தலைவர் அமித் ஷாவை சந்தித்துப் பேசினார். அதிமுகவின் அதிருப்தி தலைவர்களை சந்தித்துப் பேச வேண்டாம் என அமித் ஷாவிடம் எடப்பாடி கேட்டுக்கொண்டதாகச் சொல்லப்படுகிறது.

ஆனால் உண்மையில் அமித்ஷாவும் எடப்பாடியும் பேசியது என்ன? யார்?யார் உடனிருந்தனர் என்பது குறித்த விவரங்களை டெல்லி கில்லி ஒருவரிடம் கேட்டோம். அவர் நம்மிடம், "செங்கோட்டையன் விதித்த பத்து நாள் கெடு முடிந்த அன்றே எடப்பாடி திடீரென்று டெல்லி புறப்பட்டுச்சென்றார். ஆனால் அதற்கு முந்தியநாளே அவர் டெல்லி செல்வதாக வெளியான தகவல்கள் தவறு என்று மறுப்பு தெரிவித்து



விட்டு டெல்லிக்குப்போய் காத்திருந்து அமித்ஷாவை சந்தித்திருக்கிறார். ஒரு கட்சியின் தலைமைப்பொறுப்பில் இருப்பவர் வெளிப்படையாக பேசி ஆமாம் , அங்கே உள்துறை அமைச்சரைச்சந்திக்கிறேன் என்று சொல்லாமல் அதற்கு மறுப்பு தெரிவித்து விட்டு மறு நாளே தனது பட்டாளங்களுடன் டெல்லி சென்று முகத்தை மூடிக்கொண்டு திரும்பியிருக்கிறார்.

அமித்ஷாவை சந்திக்கப் போகும்போது அரசு காரில் சென்றவர் திரும்பும் போது சுமார் 8 கோடி மதிப்புள்ள தனியார் காரில் 'யூடர்ன்' அடிக்கையில் நிரஞ்சன்குமார் எனும் நிருபர் அதை வீடியோஎடுத்து வெளியிட்டதை அனைவரும் அறிவர். அந்தக்காரில் எடப்பாடியுடன் அமர்ந்திருந்தது ரெய்டில் சிக்கிய எடப்பாடியின் சம்பந்தி ராமலிங்கம்தான். அதனால்தான் காரில் வந்ததைப்பற்றி யாரும் கேட்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார். தவிர, எடப்பாடிக்கு முன்பாகவே அவரின் மகன் மிதுன் அமித்ஷா இல்லத்திற்கு சென்றுள்ளார் என்பதே உண்மை. மிதுனுக்கு ஆங்கிலம் நன்றாகத்தெரியும் என்பது மட்டுமின்றி ஹிந்தியும் புரிந்துகொள்ளக்கூடியவர். அடுத்தவர் வந்தால் அவ்வளவு விஷயமும் வெளி வந்து



செங்கோட்டையன்

விடும் என்பதால் பழனிசாமி ஒளிந்தே சென்று வந்துள்ளார். அமித்ஷா சந்திப்பில் அவரது சம்பந்தி ராமலிங்கமும் மகன் மிதுனும் மட்டுமே இருந்தனர்.

சந்திப்பில் அதிமுக ஒன்றிணைய வேண்டும்



என்பதை அமித்ஷா வலியுறுத்தியதுடன் 2021 தேர்தலின் போதே ஒன்றிணைய சொன்னதை நீங்கள் கேட்கவில்லை. அதனால் சசிகலா டிடிவி ஓபிஎஸ்ஸால் 30 க்கும் மேற்பட்ட தொகுதிகளில் தோற்றீர்கள். இப்போதும் அதே தவறைச்செய்தால் திமுகவே மீண்டும் ஆட்சியமைத்து விடும்.நமது கூட்டணிக்கும் பாதிப்பு ஏற்படும்.எனவே செங்கோட்டையன், ஓபிஎஸ், டிடிவி, சசிகலா என அனைவரையும் மீண்டும் கட்சியில் இணைக்க வேண்டியது அவசியம் என்று உத்தரவிட்டுள்ளார்.

மகன் மிதுன் மீதும் சம்பந்தி மீதும் ஊழல் இருப்பதால் பழனிசாமி எங்களை காப்பாத்துங்கய்யா!" என்றுதான் பயத்துடன் சரணடைந்துள்ளார்.அமித்ஷா மிதுனையும் ராமலிங்கத்தையும் சேர்த்தே அழைத்தது பலருக்குத்தெரியாது. ஆனால் வெளியில் வந்த எடப்பாடி தனக்கு நேர்ந்ததை வெளியில் காட்டிக்கொள்ளாமல் பயத்தில் உளறிக்கொட்டி வருகிறார். "பில்டிங் ஸ்ட்ராங் பேஸ்மெண்ட் வீக்!" கதைதான் அவருக்கு. அவரின் டெல்லி விசிட் ஹேப்பியாக இருந்திருந்தால் அவரே நேரடியாக பிரஸ்ஸை மீட் பண்ணி பேசியிருப்பார். முகத்தை மூடிக்கொண்டு வந்ததால் எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்பதாக நிகழ்வு நடந்துள்ளது.

ஆனால் அவர் டெல்லியில் நடந்ததை திசைதிருப்பும் விதத்தில் இரண்டு நாட்கள் கழித்து செந்தில்பாலாஜியின் ஊழல் குற்றச்சாட்டை வீடியோவாகக்காட்டி உள்ளார்.

பழனிசாமியின் டெல்லி விசிட் அச்சத்தை ஏற்படுத்தியதால் அடைந்த அவமானத்தை யாராவது ஆமாம்! நான் கும்மாங்குத்து பெற்றேன் என்றா சொல்வார்கள்? அதனால் அவர் உள்ளுக்குள் பயந்து போய்தான் உள்ளார்.

இதனிடையே டிடிவி தினகரனை சமாதானப்படுத்த அண்ணாமலை தீவிர முயற்சியெடுத்து கொண்டுள்ளதை டிடிவியே தெரிவித்துள்ளார். கடந்த 9ந்தேதியே அவரும் அண்ணாமலையும் டெல்லி செல்வதாக இருந்தது சற்று தள்ளிப்போயுள்ளது. தமிழக பாஜக தலைவராக நயினார் நாகேந்திரன் இருந்தாலும் அதிமுக விவகாரத்தில் அண்ணாமலைக்கே



சசிகலா

அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அண்ணாமலைக்கு அமைச்சர் பதவியுமில்லை. கட்சியில் பெரிய பதவியுமில்லை என்று சிலர் சொன்னாலும் அண்ணாமலை இந்தியாவின் உயர் பதவியில் அமர வைக்கப்படும் பட்டியலில் உள்ளார். ஆர்.எஸ்.எஸ்.ன் வலிமையான ஆதரவு அண்ணாமலைக்கு உண்டு என்பது என்னைப்போன்ற 'நாக்பூர்' தொடர்பாளர்களுக்குத்தான் நன்றாகத்தெரியும். எனவே இன்னும் ஓரிரு மாதங்களில் அனைவரும் கட்சியில் இணைக்கப்பட்டு அதிமுக பிஜேபி கூட்டணி வலுவாகும். இது நிச்சயம் நடக்கும்!" என்று வெளி வராத தகவல்களை அள்ளித்தந்தார்.

நமது மற்றொரு டெல்லி சோர்ஸில் கேட்டபோது, " சசிகலா சிறை சென்ற பிறகு எடப்பாடியின் பின்னால் பல முன்னாள் அமைச்சர்கள் ஆதரவு தெரிவித்து கூக்குரலிட்டுக்கொண்டிருப்பதற்கும், எடப்பாடியின் முடிவே எங்கள் முடிவு என்று அனுகூல சத்ருக்கள் முழங்குவதற்கும் எடப்பாடியிடம் இரட்டைஇலையும் கட்சியும் இருக்கிறது என்பதல்ல காரணம். கொடநாட்டில் கொள்ளையடித்து எடுக்கப்பட்ட முன்னாள் அமைச்சர்கள் சம்பந்தப்பட்ட டாக்குமெண்ட்ஸ் எல்லாம் பழனிசாமியிடமே உள்ளது. அதை



அண்ணாமலை

வைத்தே அவர் முன்னாள் அமைச்சர்களை ஆட்டிவைத்துக்கொண்டுள்ளார். அதனால்தான் எஸ்.பி.வேலுமணி போன்றோர் 'சைலண்டாக' உள்ளனர். டாக்குமெண்ட்ஸை கைப்பற்ற டெல்லி மேலிடத்திற்கு ஒரே நாள் போதும். எடப்பாடியின் பிடிவாதம் நீடித்தால் டாக்குமெண்ட்ஸ் மீட்கப்பட்டு எடப்பாடி சிறை செல்வார். சிறப்புத்தீர்மானம் போட்டு கட்சியிலிருந்து நீக்கப்பட்டவர்களாலேயே பழனிசாமியும் கட்சியில் கட்டப்படுவார். ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறும் வண்டியும்ஒரு நாள் ஓடத்திலேறும்!" என்றுசொல்லி அதிர வைத்தார்.

அதிமுகவின் மூத்த முன்னோடி ஒருவர் நம்மிடம், "எடப்பாடி ஜெயலலிதாவைப்போல் ஆளுமைமிக்கவர் அல்ல. ஜெயலலிதா காஞ்சி சங்கராச்சாரியாரையே கைது செய்தவர். கலைஞரை நடு இரவில் தூக்கி சிறையிலடைத்தவர். மோடியை வீடு தேடி வரவழைத்தவர். எம்.ஜி.ஆரே தனித்துப்போட்டியிட தயங்கியதுண்டு. ஆனால் 234 தொகுதிகளிலும் தனித்தே போட்டியிட்டு 134 தொகுதிகளில் வென்ற துணிச்சல்காரர். கே.பி.முனுசாமியின் பா.ம.க.பாசத்தால் கட்சி துரோகமிழைக்கப்பட்டதை கண்டித்து அம்மாவால் நேரடியாக பதவியிலிருந்து தூக்கியெறியப்பட வைத்தவர். வீணைப் பெண்ணை இசைபாட அழைத்த வைகையை அமைச்சரவையிலிருந்து தூக்கியெறிந்தவர். செங்கோட்டையனின் மனைவி தந்த புகாரால் அவரையும் அமைச்சரவையிலிருந்து நீக்கியவர். நயினார் நாகேந்திரனை கோபுரத்திலும் வைத்தவர். குப்பையிலும் போட்டவர். பசும்பொன் தேவருக்கு கட்சி சார்பில் தங்க கவசம் தந்தவர். நரசிம்மராவுக்கு தண்ணி காட்டியவர். கவர்னர் சென்னாரெட்டியை சென்னையை விட்டே துரத்தியவர். வாஜ்பாய் அரசை ஒரே நாளில் கவிழ்த்தவர். அரசியல் ஆலோசகராக இருந்த எம்.நடராசனையே நீக்கியவர். அழகிரியின் கோட்டையாக இருந்த மதுரையில் மாநாடுபோட்டு அவரை நடுங்கச்செய்தவர். பொதுத்தொகுதியான திருச்சியில் தலித் எழில்மலையை எம்.பி.யாக்கியவர். அருந்ததியர் சமூகத்தைச்சேர்ந்த சங்ககிரி தனபாலை சபாநாயகராக ஆக்கியவர். எம்.ஜி.ஆர் கூட இந்திராகாந்தியிடம் சரண்டரானவர். ஆனால் ஜெயலலிதா குன்ஹாவிடமே சரணடையாதவர். சிறை மீண்டவர்.நாக்கைத்துருத்திய விஜயகாந்தின் கட்சி எம்.எல்.ஏ.க்களைத்தூக்கி தே.மு.தி.க.வையே துவம்சம் செய்தவர்.அரசாங்க மின் இணைப்பில் விளக்குப்போட்ட ஆ.பி.உதயர்களை அந்த நிமிடமே நீக்கியவர். டெல்லி பத்திரிகையாளர்களை நேரடியாக சந்தித்து சாதித்தவர். நாவலரையே நடுங்கச்செய்தவர். உதிர்ந்த ரோமம் என்றவர். ஆளுமைமிக்க தலைவியாக திகழ்ந்து அரசாண்டவர். அப்படிப்பட்ட ஆளுமைமிக்கவர்களைத்தான் மக்களும் விரும்புவார்கள். ஆளுமையில்லாத கட்சியை மக்கள் நிராகரித்து விடுவார்கள். ஆளுமைமிக்க பி.கே.மூக்கையாத்தேவர் இருந்தவரை ஃபார்வர்டு பிளாக் தமிழகத்தில் எழுச்சியோடிருந்தது. ஆனால் எடப்பாடிக்கு என்ன ஆளுமை உள்ளது? ராஜேந்திரபாலாஜியை மாவட்ட செயலாளர் பதவியிலிருந்து நீக்க முடியுமா எடப்பாடியால்?"என்று கேட்டார்.

"தமிழகத்தை மீட்போம்! மக்களைக்காப்போம்!" என்ற வாசகங்களுடன் வலம் வரும் எடப்பாடி "மகனைக்காப்போம்! சம்பந்தியை மீட்போம்!" என்றுதான் டெல்லியில் சரணாகதி அடைந்திருக்கிறார். ■




உசிலம்பட்டி

பாக்யா

## விவசாயிகளின் வேதனை தீருமா..?

# 58 கிராம கால்வாய் திட்டத்திற்கு நிரந்தர தீர்வு எப்போது..?

### ● போராட்ட களத்தில் விவசாயிகள்

**மதுரை மாவட்டம் உசிலம்பட்டி பகுதியில், 58 கிராம கால்வாயில் தண்ணீர் திறக்க கோரி விவசாயிகள் அவ்வப்போது போராட்டம் நடத்தி வருகின்றனர்.ஆனால் தற்போது இது மேலும் தீவிரமாகி அனைத்து கட்சியினர் மற்றும் முன்னால், இந்நாள் எம்.எல்.ஏக்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் இணைந்து போராட்டம் செய்து வருகின்றனர்.ஆனால் அரசு தான் இதைக் கண்டு கொள்ளவில்லை.**

தேனி மாவட்டம் வைகை அணையிலிருந்து பெருமழைக் காலங்களில் தண்ணீர் திறக்கப்படும். இத்தண்ணீர் இராமநாதபுரம் பெரிய கண்மாய்க்குச் செல்லும் வழியில், தேனி, மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள பல இலட்சம் ஏக்கர் பாசன நிலங்களுக்குப் பயன்பட்டு, இறுதியில் வங்கக்கடலில் கலக்கிறது. ஆனால், இந்த தண்ணீரால் அருகில் உள்ள உசிலம்பட்டி பகுதிக்கு பலனில்லாமல், வானம் பார்த்த பூமியாக வறட்சியால் வாடிக் கிடக்கிறது. அதனால் பாதிக்கப்பட்ட 58 கிராம மக்கள் ஒன்றுகூடி, 1960 ஆம் ஆண்டு போராடியதன் விளைவாக கிடைத்தது தான் 58 கிராம பாசனத் திட்டமாகும்.

ஆனால், அதற்கு முறைப்படி 1999 ஆம் ஆண்டு தான் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதன் பின்னர் கால்வாய் அமைக்கும் பணிகள்

நடைபெற்று, ஆசியாவின் 2 வது நீளமான தொட்டிப்பாலத்துடன் கூடிய கால்வாய் எனும் பெருமையுடன் செயல்பாட்டிற்கு வந்தது. இருப்பினும் தி.மு.க மற்றும் அ.தி.மு.க என மாறி,மாறி ஆட்சிக்கு வந்தும், நீண்ட இழுபறியுடன் சுமார் 20 ஆண்டுகளுக்குப் பிறகு 2018 ஆம் ஆண்டு தான் இப்பணிகள் நிறைவு பெற்று செயல்பாட்டுக்கு வந்தது. ஏற்கனவே வைகை அணையில் இருந்து மதுரை மாவட்டம் மேலூர் வரையிலான பெரியார் பாசனக் கால்வாய் செல்கிறது. அதே போல் இந்த 58 கிராம பாசனக் கால்வாயும், வைகையின் வலது கரையில் மதகு அமைத்து சுமார் 28 கிலோ மீட்டர் தூரம் செல்கிறது.மலைப்பகுதியில் மூன்று தொட்டிப் பாலங்களுடன் உத்தப்பநாயக்கனூரில் இரு பிரிவுக் கால்வாய்வாய்களாக ஒரு புறம் உசிலம்பட்டி தாலுகாவிற்குரிய பகுதிக்கும் மற்றொரு புறம் நிலக்கோட்டை தாலுகாவிற்குரிய பகுதிக்கும் சென்று கண்மாய் மற்றும் நீர் நிலைகளில் நிரம்புகிறது. இதன் மூலம் பல்லாயிரக்கணக்கான விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுவதுடன், குடிநீருக்கும் ஆதாரமாக இருக்கிறது.

ஆனால், இத்தகைய நீரை கொண்டு வருவதற்கு ஆண்டு தோறும், விவசாயிகள் போராடிப் பெறும் அவல நிலை தான் தொடர்கிறது. அதற்கு காரணம், இக்கால்வாயில் தண்ணீர் திறக்க, தமிழக அரசு நிரந்தர அரசாணை வழங்காது தான். முதன் முதலாக அ.தி.மு.க ஆட்சியில் கால்வாயில் தண்ணீர் திறந்த போதும் சரி, தற்போதைய தி.மு.க ஆட்சியிலும் சரி அதற்கு நிரந்தர அரசாணை வழங்கப்படவில்லை. தற்போது அதற்காக தான் அனைவரும் ஒன்றிணைந்து போராடி வருகின்றனர்.

இருப்பினும் தமிழக அரசின் கருணைப் பார்வை உசிலம்பட்டி பகுதி விவசாயிகள் மேல் படாதது வேதனையான ஒன்று.

இது குறித்து நம்மிடம் பேசிய விவசாயிகள், உசிலம்பட்டி என்பது தமிழ்நாடு மட்டுமன்றி வட நாட்டில் கூட அறியும் படியான மண் வாசனையுடன் கூடிய ஊராகும். சட்ட மன்றத் தொகுதி, நகராட்சி எனும் அந்தஸ்து உள்ள இவ்வூரைச் சுற்றிய கிராமங்கள், வறட்சியால் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பவை. பருவ காலத்தில் பெய்யும் மழையை நம்பியே இப்பகுதியில் விவசாயம் நடைபெறும். இங்கு கால்வாய் பாசனம் ஏற்படுத்திக்



58 பாசன கால்வாய் மதகு



தொட்டிப்பாலம்..




தொட்டிப் பாலம் வழியாக கால்வாயில் தண்ணீர் செல்லும் காட்சி..

கொடுக்க அரை நூற்றாண்டுக்கும் மேலாக கோரிக்கை விடுக்கப்பட்டது.உசிலம்பட்டி எம்.எல்.ஏ வாக இருந்த பார்வர்ட் பிளாக் கட்சி மூத்த தலைவர் பி.என்.வல்லரசு,தமிழக அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தி ரூபாய் 34 கோடி நிதி பெற்றுத் தந்ததன் விளைவாக 4.12.1999 ல் 58 கிராம பாசனக் கால்வாய் அமைக்கும் பணிகள் துவங்கியது. ஆமை வேகத்தில் பணிகள் நடைபெற்று 2018 ஆம் ஆண்டு அ.தி.மு.க ஆட்சியில் கால்வாயில் தண்ணீர் திறக்கப்பட்டது. இருப்பினும் அதற்கு நிரந்தர ஆணை எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. இராமநாதபுரம், மேலூர், திருமங்கலம் பகுதி பாசனத்திற்கு தண்ணீர் திறப்பிற்கு நிரந்தர ஆணை இருப்பதால் ஆண்டு தோறும் தாமதமின்றி தண்ணீர் திறக்கப்படுகிறது. ஆனால் 58 கால்வாய்க்கு நிரந்தர அரசாணை இல்லாததாலும், வைகையில் 67 அடி தண்ணீர் நிரம்பினால் மட்டுமே திறக்க முடியும் என்பதாலும், தொடர்ந்து சிக்கல் நிலவுகிறது. 62 அடி உயர்ந்தால் இதில் தண்ணீர் திறக்க வேண்டும் என்றும், நிரந்தர அரசாணை வேண்டும் என்றும் விவசாயிகள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தாலும் தமிழக அரசு கண்டு கொள்ளவில்லை. இதையடுத்து விவசாயிகள் சங்கத்தின் சார்பில் கடந்த 12.8.25 ஆம் தேதி உசிலம்பட்டி பகுதியில் கடையடைப்பு, பஸ் மறியல் என மாபெரும் போராட்டம் நடைபெற்றது. அதில் முன்னால் எம்.எல்.ஏக்கள் பி.வி.கதிரவன், மகேந்திரன் உள்ளிட்ட அனைத்து கட்சியினர், விவசாய சங்கத்தினர், பொதுமக்கள் ஒற்றுமையுடன் கலந்து கொண்டு நிரந்தர அரசாணை கோரி முழக்கமிட்டனர்.அதே போல் கடந்த 2.9.25 ஆம் தேதி தற்போதைய அதிமுக(ஓ.பி.எஸ். அணி) எம்.எல்.ஏ அய்யப்பன் தலைமையிலும் தமிழக அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆனால் தி.மு.க அரசு இதுவரை கண்டு கொள்ளவே இல்லை. அ.தி.மு.கவும், தி.மு.கவும் இதில் ஒரே நிலையில் தான் உள்ளது. இந்த கால்வாயில் முதல் முறையாக தண்ணீர் திறந்த போதே அ.தி.மு.க அரசு இதற்கு நிரந்தர அரசாணை பிறப்பித்திருக்கலாம். அடுத்து வந்த தி.மு.க அரசாவது முறைப்படி அரசாணை வெளியிட்டிருக்கலாம். இரு அரசுகளும் இப்பகுதி மக்களை வஞ்சித்தது நிதர்சனமான உண்மையாகும்.

நடந்தவை போகட்டும். இனி முடிவெடுக்க வேண்டியது தற்போதைய தி.மு.க அரசு தான். தேர்தல் கால வாக்குறுதிகளை அள்ளி வீசிப் பலனில்லை. இப்போது இளைஞர்கள் உள்ளங்கையில் இணைய தளங்களை வைத்துக்




முன்னாள் எம்.எல்.ஏ. கதிரவன் தலைமையில் ஆர்ப்பாட்டம்




ஓ.பி.எஸ். அணி எம்.எல்.ஏ., அய்யப்பன் ஆர்ப்பாட்டம்

கொண்டு அனைத்து அரசியல்வாதிகளையும் கண்காணித்து வருகின்றனர். அவர்கள் முடிவெடுக்கும் நபர்கள் தான் அடுத்து பதவிக்கு வர முடியும். இதை மனதில் வைத்து ஆட்சியாளர்கள் செயல் படவேண்டும். நாட்டின் முதுகெலும்பான விவசாயிகள் பாசனத் தண்ணீருக்கு ஆண்டு தோறும் போராடனுமா.?வைகை ஆற்றில் திறக்கும் தண்ணீர் வீணாக கடலில் கூட கலக்கலாம். எங்களுக்கு 150 கன அடி நீரை பாசனத்திற்கு திறக்க கூடாதா.? இதில் என்ன பாகுபாடு.. நாங்களும் விவசாயிகள் தானே.?

எனவே இது குறித்து தமிழக அரசு நிரந்தர அரசாணை வெளியிட வேண்டும். தண்ணீர் திறக்கும் போதும் பெயரளவிற்கு சில நாட்கள் மட்டும் கொடுக்காமல், கூடுதலாக கொடுத்தால் தான் உரிய பலன் கிடைக்கும். இதற்கு கட்சி பேதமின்றி அனைவரும் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றனர்.

விடியல் அரசு இப்பகுதி விவசாயிகளின் வேதனையை தீர்க்குமா..? ■



ஜோலார்பேட்டை

மகேஸ்வரன்

# லாபத்தில் இயங்கிய பால் சங்கம்...

# சங்கத்துக்கு பால் ஊற்றிய செயலாளர்...

## ● காப்பாற்ற கோரி கலெக்டரிடம் கதறல்

**கொள்ளை அடித்தற்காக பைன் கட்டிவிட்டு, மீண்டும் கொள்ளை அடித்த கூட்டுறவு செயலாளர் மோகனிடம் இருந்து பால் சங்கத்தை காப்பாத்துங்க என பால் முகவர்கள் மூன்று ஆண்டுகளாக கதறும் சத்தம் அந்த துறை அதிகாரிகளுக்கு கேட்காமல் இருக்கும் ரகசியம் தான் தெரியவில்லை.**

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை அடுத்த. காவேரிப்பட்டு பகுதியில் கடந்த 37 வருடங்களாக பால் கூட்டுறவு சங்கம் இயங்கி வருகிறது. இந்த கூட்டுறவு சங்கத்தில் 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை சங்கத்தின் தலைவர்கள், செயலாளர்கள் முறைகேடு செய்ததால், அவர்கள் நீக்கப்பட்டனர் . அதன்பிறகு மாவட்ட துணை பதிவாளர் ( வேலூர்) கீழ் , செயலாளர் மேற்பார்வையில் இயங்கி வருகிறது.

இந்நிலையில், மீண்டும் பல்வேறு முறைகேடுகள் நடப்பதாகவும் இந்த சங்கம் 2022 ஆண்டு மட்டும் சுமார் ரூபாய் 8 லட்சத்து 17 ஆயிரத்து 709. ரூபாய் லாபத்தில் இயங்கி வந்தது. ஆனால் செயலாளர் மோகன் மீண்டும் பொறுப்பேற்றப் பிறகு, 2023 மற்றும் 2024 ஆம் வரை மட்டுமே ரூபாய் 17 லட்சம் வரை முறைகேடு நடந்திருப்பதாக ஆர்.டி.ஐ மூலம் அம்பலமானதையடுத்து, கொதிப்படைந்த காவேரிபட்டு பால் முகவர்கள் கலெக்டர் முதல் . பால் வளத்துறை அமைச்சர் வரை புகார் அனுப்பி பார்த்தனர் எந்த நடவடிக்கையும் எடுக்காததால், கடந்த 8 ஆம் தேதி நடந்த திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் குறைதீர்ப்பு கூட்டத்தில் 100 க்கும் மேற்பட்ட பால் முகவர்கள் கையெழுத்திட்டு புகார் அளித்துள்ளார்கள்.

அந்த புகாரில்.. 37 ஆண்டுகளாக காவேரிபட்டு கூட்டுறவு பால் சங்கத்திற்கு வழங்கி வருகிறோம். எங்களுக்கு வருடம் தோறும் . போனஸ் மற்றும் டிசம்பர் மாதம் கடைசியில் ஒரு லிட்டருக்கு

30 பைசா வீதம் கணக்கீடு செய்து ஊக்கத்தொகை வழங்குவது வழக்கமான ஒன்று.

ஆனால், 2023 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரை , சங்கத்தில் நஷ்டம் ஏற்பட்டதாக காரணம் காட்டி ஊக்கத்தொகை மற்றும் ஆண்டுக்கான போனஸ் தொகை வழங்காமல் ஏமாற்றி வருகின்றனர்.


ஆரம்பம் முதல் 2022 ஆம் ஆண்டு வரை லாபத்தில் போய்க் கொண்டிருந்த இந்த பால் கூட்டுறவு சங்கம், 3 ஆண்டுகளாக நஷ்டத்தை சந்தித்து வருவதாக கூறுகின்றனர்.

கடந்த 14 ஆண்டுகளாக தொடர்ந்து லாபத்தை ஈட்டி வந்த இந்த சங்கம், திவால் ஆனது எங்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பால் உற்பத்தியாளர்கள் நலனை கருத்தில் கொண்டு மாவட்ட ஆட்சியர் காவேரிப்பட்டு பால் சொசைட்டியை காப்பாற்ற வேண்டும்.

2023 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரை மூன்று ஆண்டிற்கான அனைத்து நிலுவை தொகையை, கொள்ளை அடித்தவர்களிடம் பெற்று தரவேண்டும். முறைகேட்டில் ஈடுபட்ட அனைவரையும் கைது செய்து சிறையிலடைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.



கலெக்டரிடம் புகார் மனு...



தண்ட தீர்வு நகல்

இதுகுறித்து உதவியாளர் விஜயகுமாரிடம் பேசும்போது,

ஆமாங்க.. மோகன் என்பவர் முறைகேட்டில் ஈடுபட்டதை கண்டும் காணாமல் இருக்க என்னால் முடியல. அதனை வெளிச்சத்துக்கு கொண்டு வந்ததால் சில மாதங்களாக பணியில் சேர்க்காமல் கோபு மற்றும் மோகன் ஆகியோர் அலைக்கழித்தனர்.

அதனைத்தொடர்ந்து. இந்த சங்கத்தின் ஆட்களை புதிதாக மாற்றக் கோரியும், உதவியாளரான என்னை உடனடியாக கூட்டுறவு சங்கத்தில் சேர்க்கக் கோரியும், சங்கத்தின் பால் உற்பத்தியாளர்கள் மற்றும் 300க்கும் மேற்பட்ட மக்கள் ஒன்று திரண்டு சாலை மறியலில் ஈடுபட்டு ஆதரவு அளித்ததால் பணியில் தொடர்கிறேன் என்றார்.

ஆர்.டி.ஐ மூலம் தகவல் பெற்ற ஆனந்தன் கூறுகையில், ஏற்கனவே, காவேரிப்பட்டுப் பால் கூட்டுறவு சங்கத்தின் தலைவராக இருந்த கோபு, செயலாளர் மோகன் ஆகியோர், பால் கேன்கள் வாங்கிய கணக்கில் 42 ஆயிரம் ரூபாயையும், உள்ளூரில் பால் விற்பனை செய்யப்பட்ட தொகையிலிருந்து மூன்று லட்சம் ரூபாயையும் கையாடல் செய்துவிட்டதாக, அப்போது ஏகப்பட்டப் புகார்கள் குவிந்தன.

அதன்பேரில் விசாரணையைத் தொடங்கிய அதிகாரிகளால், முறைக்கேடு நடந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டு கோபு சஸ்பெண்ட்

செய்யப்பட்டார்.

கோபுவின் முறைக்கேடுகளுக்கு சங்க செயலாளராக இருக்கும் இதே மோகன் உடந்தையாக இருந்ததாக பால் உற்பத்தியாளர்கள் தரப்பிலிருந்து புகார் கூறப்பட்டதால், கூட்டுறவு சரக முதுநிலை ஆய்வாளர் விசாரணையில் இறங்கினார். அப்போது, 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் வரை பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கிய ஊக்கத்தொகை மற்றும் கறவைப்பசு கடனுக்கான தவணைத் தொகை ஆகியவற்றிலும் கையாடல் நடந்திருப்பதை கண்டுபிடித்தார்.



செயலாளர் மோகன்



பால் முகவர் ஆனந்தன்

அதனைத் தொடர்ந்து, காவேரிப்பட்டுப் பால் கூட்டுறவு சங்கத்தின் வரவு செலவு கணக்குகளும் தனி அலுவலர் மூலம் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டது. அந்த ஆய்வில், ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாயை முறைகேடாக சுருட்டியது தெரியவந்ததால், பால் கூட்டுறவுச் சங்க செயலாளர் மோகனும், அப்போது சஸ்பெண்ட் செய்யப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து, 23.4. 2021 ல், அன்றைய மாவட்ட (வேலூர்) துணை பதிவாளர் தயவில், தண்ட தீர்வு என்ற பெயரில் ரூபாய் 52 ஆயிரத்து 640 கட்டிவிட்டு, இதே சங்கத்தில் சங்க செயலாளர் பொறுப்பில் மீண்டும் மோகன் பணியில் அமர்த்தப்பட்டார். இவரோடு, கோபு தலைவராகவும், 9 இயக்குனர்களோடு, பொறுப்பு செயலாளர் ஆஞ்சி ஆகியோர் நிர்வாகத்தை நடத்தி வந்தனர்.

தலைவர் கோபுவும், செயலாளர் மோகனும் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டு வருவதாக. உதவியாளர் விஜயகுமார். அரசுக்கும், பொதுமக்களுக்கும் அம்பலப்படுத்தியதால், ஆத்திரமடைந்து, விஜயக்குமாரை அப்போது பணியிடை நீக்கம் செய்துள்ளார் மோகன்.

இருப்பினும் மாவட்ட நிர்வாகத்திடம் நடந்தவற்றை கூறிய விஜயகுமார், உத்தரவு பெற்று மீண்டும் உதவியாளர் பணியில் இருந்து வருகிறார்.

ஆர்.டி.ஐ யிடம் பதில் கேட்டிருந்ததை, ஒன்றிய பால் உற்பத்தி அலுவலகம் மூலம் தெரிந்து கொண்ட மோகன், இந்த விஷயத்தினை பெரிதுபடுத்த வேண்டாம். தணிக்கையாளர் உதவியோடு கணக்கை சரி செய்வதாக என்னிடம் கெஞ்சினார். பணத்தை சுருட்டாதவர் ஏன் பதற்றப்பட வேண்டும். இவர்களை சும்மா விட கூடாது. 2019 ஆம் ஆண்டு புகாரில் மோகனை கைது செய்து இருக்க வேண்டும் அல்லது பதவியிறக்கமாவது செய்து இருக்க வேண்டும். சம்பிரதாயத்துக்காக தண்ட தீர்வு கட்டவைத்து மீண்டும் அதே செயலாளர் பதவியில் அமர்த்தப்பட்டார். அதன் விளைவுதான் அதே கைவரிசையை காட்டி இருக்கிறார் என்றார்.

புகார் குறித்து மோகனிடம் பேசினோம். அப்போது அவர், நான் பணம் எல்லாம் கொள்ளை அடிக்கலிங்க. பால் கொள்முதல் செய்வதில் சிறு சிறு தவறுகள் நடந்திருக்கலாம். அதனால் நஷ்டத்திற்கு வாய்ப்பு இருக்கிறது. 2021 ஆம் ஆண்டில், பால் கேன்கள் விவகாரத்தில் நான் தண்ட தீர்வு கட்டியது உண்மைதான். அந்த இரண்டு ஆண்டுகள் தான் நஷ்டத்தில் சங்கம் தள்ளாடுகிறது. புகார் குறித்து இனிமேதான் அதிகாரிகள் வந்து விசாரிப்பார்கள். அப்போது அவர்களிடம் காரணத்தை சொல்வேன் என்றார் கூலாக.

மாவட்ட பதிவாளர் சித்ரா அவர்களை தொடர்பு கொண்டு கேட்டதற்கு, நான் சமீபத்தில் பணி மாறுதலில் வந்தேன். நீங்கள் குறிப்பிடும் காவேரிபட்டு சங்கம் மீது புகார் வந்துள்ளது. கண்டிப்பாக பால் முகவர்களுக்குண்டான ஊக்கத்தொகை போனஸ் தொகை வழங்காமல் இருக்கும் பட்சத்தில், ஆய்வு செய்து, அதற்கான நடவடிக்கை எடுபேன். செயலாளர் முறைகேட்டில் ஈடுபட்டது ஆய்வில் தெரியவந்ததால் சட்டப்படி நடவடிக்கை உண்டு என்றார்

கடந்த மூன்று ஆண்டுகளாக ஊக்கத்தொகை மற்றும் போனஸ் வழங்காமல் நஷ்டத்தை காரணம் காட்டி பால் முகவர்களை காவேரிப்பட்டு பால் கூட்டுறவு சங்கம் ஏமாற்றுவது முறையல்ல. அவர்கள் கோரிக்கையை ஏற்று தொடர்ந்து கையாடலில் ஈடுபட்டு வரும் செயலாளர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அனைவரின் விருப்பம். ■

# இவரா.? கே.சி.பி. சொன்ன நரி..?

## அ.தி.மு.கவில் அடுத்த பூகம்பம்..?

**நேற்று... ஓ.பி.எஸ்... இன்று... செங்கோட்டையன்... வெளியேற்றிய அந்த நரி.. நாளை... சி.வி.சண்முகம், எஸ்.பி.வேலுமணி போன்றோரையும் வெளியேற்றும். அந்த நரியால்தான் நானும் வெளியேற்றப்பட்டேன் என தொடங்கி... எடப்பாடி அமித்ஷாவை மோதவிட்டு, எடப்பாடி பழனிசாமியை முடித்துக்கட்ட முனைப்போடு இருக்கும் அந்த நரி, விஜய் எனும் மாய மானை முன்னிறுத்தி அ.தி.மு.க மூலமாக விஜய்யை முதல்வராக்க முடிவு செய்துள்ளது என முடியும் என்கின்ற அந்த பதிவு ... அ.தி.மு.கவில் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றும் விதமாக இருக்கிறது.**

அ.தி.மு.க முன்னாள் எம்பி கே.சி.பி என்று அழைக்கப்படும் கே.சி.பழனிச்சாமி கடந்த 7ந்தேதி தனது முகநூல் பக்கத்தில், அ.தி.மு.க தலைமை பொறுப்பில் இருக்கும் அந்த முக்கிய புள்ளியை மைய்யப்படுத்தி நரியோடு ஒப்பிட்டு ஒரு பதிவை எழுதி பற்றவைத்துள்ளார்.

அந்த பதிவு தற்போது தீயாக எரிந்து கொண்டிருக்கிறது.

அந்த பதிவில்....

அ.தி.மு.கவை சீர்குலைத்துக் கொண்டு வரும் தந்திரமான நரி எப்போது அம்பலமாகும்?

அ.தி.மு.கவில் ஒரு சாதி வெறி பிடித்த நரி, அம்மா காலத்தில் சாதி வெறியன் என்று முத்திரை குத்தப்பட்டு, அமைச்சரவை மற்றும் கட்சிப் பொறுப்புகளில் இருந்து நீக்கப்பட்டு ஓரம் கட்டப்பட்டது.

அந்த நரி அம்மா இருக்கிற வரை



அமித்ஷாவுடன் எடப்பாடி பழனிசாமி



கே.சி.பழனிச்சாமி



கே.பி.முனுசாமி



ஓ.பி.எஸ்



விஜய்

அட்ரஸ் இல்லாமல் இருந்தது, ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு ஓ.பன்னீர்செல்வத்தை முதலமைச்சராக்குகிறேன், கட்சித் தலைவர் ஆக்குகிறேன் என்றெல்லாம் சொல்லி சதி திட்டம் தீட்டி ஓ.பி.எஸ்சை முன்னிறுத்தி முதல் பிளவை உருவாக்கியது, அதில் தன்னை இரண்டாம் இடத்திற்கு உயர்த்திக் கொண்டது.

அதன்பின் அந்த நரி முக்குலத்து சமுதாயத்தை பழிவாங்க முனைப்போடு செயல்பட்டது, இந்த இயக்கம் ஒன்றிணைய வேண்டும் என்று எல்லா தொண்டர்களும் விரும்பிய பொழுதும், நான் அதற்கு முயற்சி எடுத்த பொழுதும், அந்த நரி அதற்கு முட்டுக்கட்டையாக இருந்தது, ஒரு நாள் அந்த நரியை தோலுரித்த பின்னர், சில காலம் முடங்கியது.

பின்னர், ஓ.பி.எஸ், இ.பி.எஸ் அணிகள் இணைகிற பொழுது, முட்டுச்சந்தில் இருந்து தனது சித்து விளையாட்டுக்கள் மூலம், பல சீனியர்களை பின்னுக்குத் தள்ளி மீண்டும் முன்னேறியது.

இந்த இயக்கம் வலுவோடு விளங்க வேண்டும் என்று நினைத்த பலரையும் தன் சதி திட்டத்தால் பின்னுக்கு தள்ளியது. என் போன்றவரை கட்சியிலிருந்து நீக்க வைத்தது.

தற்பொழுதும் எடப்பாடி பழனிசாமியை புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் போலவும், ஜெயலலிதா போலவும் ஆக்கி விடுவேன் என்று, ஈ.பி.எஸ்.ஐ உசுப்பேற்றி செங்கோட்டையன் போன்றவர்களை வீழ்த்தி, இந்த இயக்கத்தின் ஒற்றுமையை தடுத்து, வலிமையை சிதைத்து கொண்டு இருக்கிறது.

சி.வி.சண்முகம், எஸ்.பி.வேலுமணி போன்றோரையும் காவு வாங்க காத்துக் கொண்டிருக்கிறது. அதற்கேற்ற சதிவலைகளையும் தீட்டிக் கொண்டிருக்கிறது. அதிகார போதை ஊட்டி ஊட்டி எடப்பாடியை தன் வசப்படுத்தி வைத்துக் கொண்டு, இந்த இயக்கத்தை என்றுமே வெற்றி பெற முடியாத நிலைக்கு ஆளாக்கிக் கொண்டிருக்கிறது. எடப்பாடி பழனிசாமி இனம் கண்டு அந்த நரியை தோலுரிக்காவிட்டால், 2026 மட்டும் அல்ல எந்த காலத்திலும் ஆட்சிக் கட்டிலில் அமர முடியாத நிலை ஏற்படும், இவர் காலத்தில் இந்த இயக்கம் வலுவிழந்தது என்ற தீராத பளிச்சொல்லுக்கு எடப்பாடி ஆளாக நேரிடும்.

மேலும், எடப்பாடியையும், அமித்ஷாவையும் மோதவிட்டு, எடப்பாடி பழனிசாமியையும் முடித்துக்கட்ட முனைப்போடு இருக்கிறது அந்த நரி, விஜய் எனும் மாய மானை முன்னிறுத்தி அ.தி.மு.க மூலமாக விஜய்யை முதல்வராக்க முடிவு செய்துள்ளது அந்த நரி.

அந்த நரியின் உண்மை பெயரை தெரிந்தவர்கள் கமெண்டில் பதிவிடவும்... என்பதுதான் கே.பி.பழனிச்சாமியின் அந்த பதிவு.

அவர் முகநூலில் உள்ள கமெண்ட் பாக்கஸில்.. திறந்து பார்த்தபோது அ.தி.மு.க துணை பொதுச்செயலாளர் கே.பி.முனிசாமி பெயரைத்தான் பலரும் குறிப்பிட்டிருந்தார்கள்.

ஏற்கனவே அ.தி.மு.கவில் வெம்பிக் கொண்டிருக்கும் எரிமலையில், கே.சி.பழனிச்சாமி தன் பங்கிற்கு கொளுத்தி போட்டிருப்பது அ.தி.மு.கவினரிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. ■


கோவை | நெப்போலியன்

# ஊராட்சி செயலாளர் தற்கொலை முயற்சி..!

## மூடி மறைத்த மாவட்ட நிர்வாகம்..!

### ● மிரட்டப்படுகின்றனரா அரசு ஊழியர்கள்..?

**கோவை மாவட்டம் ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தென் சித்தூர் ஊராட்சியில் செயலாளராக இருப்பவர் முகுந்தன். அவர் கடந்த ஜூலை மாதம் விஷம் குடித்து தற்கொலை செய்து கொள்ள முயன்று காப்பாற்றப்பட்டு, பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அப்படி அவர் தற்கொலை செய்து கொள்ள காரணமாக அவர் கையால் எழுதியதாக சொல்லப்படும் ஒரு நீண்ட கடிதம் ஒன்றை ஊராட்சி செயலாளர் சங்கத் தலைவருக்கும், வேறு சிலருக்கும் அனுப்பி வைத்திருந்தார்.**




ஐ.பெரியசாமி

அந்த கடிதத்தில் முகுந்தன் கூறியிருந்த விஷயங்கள் ஆனைமலை ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றி வரும் அனைத்து ஊராட்சி செயலாளர்களையும் கதிகலங்க வைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் கோவை மாவட்ட ஊராட்சிகளின் உதவி இயக்குநர் கமலக்கண்ணன், தன்னிடம் மாதந்தோறும் மாமூல் கேட்டு மிரட்டுவதாகவும், ஊராட்சியில் தணிக்கை ஆய்வு செய்ய இருபதாயிரம் ரூபாயும், அதோடு காருக்கு பணம், பார்டிக்கு பணம் என்று அங்கலக்குறிச்சி ஊராட்சி செயலாளர் சிவப்பிரகாஷ் மூலம் தொடர்ந்து நெருக்கடி கொடுத்து வருகிறார். ஒரு சிறிய ஊராட்சியில் அவ்வளவு பணத்திற்கு நான் எங்கே போவேன் என்று சூழ்நிலையை எடுத்துக் கூறினாலும், விடாமல் எனக்குத் தொந்தரவு கொடுத்து வந்தார்.

மேலும், நான் பணியாற்றும் ஊராட்சியில் எனக்கு எந்த தகவலும் தெரிவிக்காமல் குடிநீர் வழங்கல் திட்டம் உட்பட பெரிய அளவிலான எந்த பணிகளையும் வேண்டுமென்றே



பொன்னையா



கமலக்கண்ணன்



முகுந்தன்

இருவரும் தன்னிச்சையாக செயல்படுத்தி, என்னை செல்லாக்காசாக நினைத்து, என்னை தவிர்த்து விட்டு ஊராட்சி நிதியை அவர்களே கையாலும் நிலைக்கு சென்று விட்டனர். இவர்களின் முறைகேடுகளுக்கு நான் துணை போகவில்லை என்பதால், ஊராட்சி நிதியில் நான்கு லட்சம் ரூபாய் பற்றாக்குறை காட்டுகிறது என்று பொய்யான தகவல்களை சொல்லி என் மீது வீண்பழி சுமத்த முயற்சித்து, அது முடியாமல் போகவே, மேற்படி நான்கு லட்சம் பற்றாக்குறை என்பது கம்யூட்டர் மென்பொருள் தகராறு என்று நழுவி விட்டார்கள்.

இப்படி பல விதங்களில் எனக்கு பல்வேறு தொந்தரவுகளை கமலக்கண்ணன், சிவப்பிரகாஷ் மூலம் கொடுத்து வந்ததால், என்னால் இனியும் உயிர்வாழ முடியாது என்கிற நிலையில் தான் நான் இந்த முடிவுக்கு வருகிறேன். என் சாவுக்கு காரணமான மேற்படி இருவரும் கண்டிப்பாக தண்டிக்கப்பட வேண்டும் என அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார் முகுந்தன்.

சரி முகுந்தன் கடிதத்தில் கூறியிருந்த அந்த கருப்பு ஆடான அங்கலக்குறிச்சி ஊராட்சி செயலாளர் சிவப்பிரகாஷ் எப்படி என்று விசாரணையில் இறங்கினோம். நமது விசாரணையில் சிவப்பிரகாஷை குறித்து முகுந்தன் குறிப்பிட்டிருந்த அனைத்து தகவல்களும் உண்மை என்று தான் தெரிய வருகிறது.

அதாவது, சிவப்பிரகாஷ் முதன் முதலில் அங்கலக்குறிச்சிக்கு வரும் போது, இந்த பூனையும் பால் குடிக்குமா என்று பார்ப்பவர்கள் நினைக்கின்ற அளவுக்கு தான் இருந்துள்ளார். ஆனால், நாளாக நாளாக இந்த பூனை பால் மட்டுமல்ல பாலை மடியோடு விழுங்கி விடக்கூடிய வல்லமை கொண்டது என்று அவர்களே பின்னாளில் அறிந்து கொண்டனர். கடந்த 2020 முதல் 2025 வரை அங்கலக்குறிச்சிக்கு தலைவராக இருந்த தம்பி என்கின்ற திருஞான சம்பத்குமாரை, தனது அபார நடிப்பால் கைக்குள் போட்டுக் கொண்டு, இஷ்டத்துக்கு ஆட்டம் போட்டு வந்த சிவப்பிரகாஷ், தான் போடுவது தான் கணக்கு என்று ஊராட்சி பணத்தை சகட்டுமேனிக்கு ஆட்டையைக் போட்டு வந்துள்ளார்.

அப்போதிலிருந்தே ஆனைமலை கிழக்கு ஒன்றியச் செயலாளர் யுவராஜிடமும் நல்ல நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார். அந்த நெருக்கம் தற்போது கை கொடுக்க, தலைகால் புரியாமல் ஆடி வரும் சிவப்பிரகாஷ் குறித்து சக ஊராட்சி செயலாளர்கள் தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

மேலும் அவர்கள் கூறும்போது, அவர் யாரையும் மதிக்க மாட்டாருங்க. பி.டி.ஓ உட்பட எந்த அதிகாரியிடமும் திமிராக தான் நடந்து கொள்வார். முகுந்தன் கிட்ட மட்டும் அல்ல ஒவ்வொரு பஞ்சாயத்திலும், ஏ.டிக்கு பஞ் சாயத்துக்கு மாதாமாதம் ஒரு தொகை கொடுத்தாக வேண்டும். அதோடு தணிக்கை ஆய்விற்கு தனியாக ஒரு தொகையை தர வேண்டும் என கண்டிஷன் போட்டு வாங்கறாருங்க. அதுமட்டல்லாமல், எந்த ஊராட்சியில் எந்த வேலை நடந்தாலும் அவர் உள்ள வந்து அதிகாரம் பண்ணிட்டு இருப்பாருங்க. இவரை யாராவது தட்டிக் கேட்டால், ஏய் என்னோட ஒரு கையில ஒன்றியம் இன்னொரு கையில ஏ.டி பஞ்சாயத்து. என்ன யாரும் ஒன்றும் புடுங்க முடியாது என்று தெனாவட்டாக பேசுவாருங்க. அவுங்களும் இந்த ஆளு பேச்சைத் தான் கேட்கிறாங்க. அந்த அளவிற்கு அவுங்கள தன்னுடைய குள்ளநரி தனத்தால மயக்கி வச்சிருக்கிறாருங்க. அப்படி இல்லன்னா இரண்டு மூன்று முறை பணியிட மாற்றம் வந்தும் அவங்க தயவில்லாம இங்கேயே குப்பை கொட்டிக் கொண்டு இருக்க முடியுமா நீங்களே சொல்லுங்க என்று நம்மிடம் கொட்டித்

தீர்த்தனர் சிவப்பிரகாஷ் குறித்து சக ஊராட்சி செயலாளர்கள்.

நமது கேள்வியெல்லாம் கராராக மாமூல் வசூலித்து கொடுக்க இப்படிப்பட்ட ஒருவர் தான் நமக்கு வேண்டும் என ஏ.டி கமலக்கண்ணன் வேண்டுமானால் சிவப்பிரகாஷை தோளில் தூக்கிக் கொண்டு திரியலாம். ஆனால், தவறு என்றால் யாராக இருந்தாலும் சரி, பக்கத்தில் கூட வரக்கூடாது என்று நேர்மையாகவும் கண்ணியமாகவும் மக்கள் பணியாற்றி வரும் ஆனைமலை கிழக்கு ஒன்றியச் செயலாளர் யுவராஜ், சிவப்பிரகாஷ் விஷயத்தில் ஏன் அமைதி காக்கிறார் என்பது தான்.



சிவப்பிரகாஷ்

மேற்படி முகுந்தன் விஷயம் குறித்து சிவப்பிரகாஷை தொலைபேசியில் தொடர்பு கொண்டு நாம் கேட்ட பொழுது, அண்ணா இது சம்மந்தமாக யாரிடமும் எதுவும் பேச வேண்டாம் என ஒன்றியம் சொல்லியிருக்கிறார். அதனால், அவர்கிட்ட கேட்டுக் கொள்ளுங்கள் என்று சட்டென ஒரே வரியில் கூறினார் அவர் நம்மிடம்.

இது குறித்து நாம் மேலும் விசாரிக்க, தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட முகுந்தனை தொடர்பு கொண்டு கேட்ட பொழுது, நாளை பார்க்கலாம். பிறகு பார்க்கலாம். சாயந்திரம் பார்க்கலாம். என்று தான் இன்று வரை சொல்லி கொண்டு இருக்கிறார். அவர் அந்த அளவிற்கு மிரட்டப்பட்டிருக்கிறார் போல. அதுவும் சரிதான், ஏ.டி கமலக்கண்ணன் மற்றும் சிவப்பிரகாஷ் ஆகிய இருவர் மீதும் தனது கைப்பட எழுதி வைத்து விட்டு தற்கொலைக்கு முயன்றவர் பின்னர் தனது மகன் சரியாக படிக்க மாட்டேன் என்கிறான் என்பதற்காக தான் தற்கொலைக்கு முயன்றேன் என்று பிறழ் சாட்சி அளித்தவர் ஆயிற்றே.

சரி முகுந்தனின் குற்றச்சாட்டுகளின் மையப்புள்ளியான கமலக்கண்ணனிடமே இது குறித்து கேட்டு விடலாம் என அவரது மொபைல் போனில் தொடர்பு கொண்டோம். தற்போது வரை நோ ரெஸ்பாண்ட்ஸ். எது எப்படியோ சிவப்பிரகாஷைப் போல கருப்பு ஆடுகள் அரசு துறைகளில் உலா வரும் போது, கமலக்கண்ணன்கள் காட்டில் பணமழைக்கு பஞ்சமில்லை என்றே சொல்லலாம்.

ஊராட்சி செயலாளர்கள் மற்றும் ஊழியர்கள் தவறு செய்தால், நடவடிக்கை எடுக்க வேண்டிய மாவட்ட ஊராட்சி உதவி இயக்குனரே குற்றச்சாட்டுகளின் மையப்புள்ளியாக இருப்பதால், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பொன்னையா, துறை அமைச்சர் ஐ.பெரியசாமி ஆகியோர் தான் தவறு செய்த ஏ.டி கமலக்கண்ணன் மீதும், அதற்கு துணை போன ஊராட்சி செயலாளர் சிவப்பிரகாஷ் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். செய்வார்களா பொறுத்திருந்து பார்ப்போம்.. ■


பரபரப்பு செய்தி

மாதமிருமுறை இதழ்

## விளம்பர கட்டணம்

| | பல வண்ணம் | | | | கருப்பு வெள்ளை |
|---|---|---|---|---|---|
| | முதல் உள் அட்டை | கடைசி உள் அட்டை | வெளி அட்டை | உள் பக்கம் | உள்பக்கம் |
| முழு பக்கம் | ரூ.20,000 | ரூ.20,000 | ரூ.30,000 | ரூ.15,000 | ரூ.10,000 |
| அரைப்பக்கம் | | | | ரூ.8,000 | ரூ.6,000 |

தொடர்புக்கு: 99405 14136 / 94450 45619

திருப்பத்தூர் | மகேஸ்வரன்

## திருப்பத்தூர் தொகுதி

# தி.மு.க கோட்டையை தகர்க்குமா அ.தி.மு.க.,?

## கழகங்களின் கள நிலவரம்..!

**தமிழ்நாட்டில் ஏப்ரல் இறுதி அல்லது, மே மாதம் தொடக்கத்தில் 2026 க்கான சட்டமன்றத் பொது தேர்தல் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுவதால், ஆளும் தி.மு.க ஓராண்டிற்கு முன்னரே தேர்தல் பணியை தொடங்கிவிட்டது. எதிர்கட்சியான அ.தி.மு.க, பா.ம.க, தே.மு.தி.க போன்ற கட்சிகளின் தலைவர்கள், தேர்தல் சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.**

அந்த வரிசையில் , பரபரப்பு செய்தி புலனாய்வு இதழும் 2026 தேர்தல், சட்டமன்ற தொகுதி வாரியாக கள நிலவரங்களை, வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

திருப்பத்தூர் மாவட்ட தலைநகரான திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி நிலவரம் குறித்தும், இரு கழகங்களில் யாருக்கு சீட்டு..? யாருக்கு..? என்பது குறித்தும் விரிவாக காண்போம்.

திருப்பத்தூர் தொகுதி 1952 முதல் தேர்தலை சந்தித்து வருகிறது. கந்திலி, புதூர் நாடு மலை, சுந்தரம்பள்ளி, திருப்பத்தூர் நகரம் போன்ற முக்கிய பகுதிகள் திருப்பத்தூர் தொகுதிக்குள் அடங்கியிருக்கின்றன. இந்த தொகுதியை பொறுத்தவரை, பெரும்பான்மையாக இருக்கும் வன்னியர்கள், வெள்ளாளர்கள்தான் இங்கு வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதில் முக்கியப் பங்குவகிக்கிறார்கள்.

அடுத்து செங்குந்தர், அகமுடையார் சமுதாயத்தினரும், ஆதிதிராவிடர்களும் பெருமளவில் வாக்கு வங்கியில் அதிகாரமிக்கவர்களாக உள்ளனர்.

பழங்குடியின மக்கள் 11 சதவீதத்தினரும் இஸ்லாமியர்கள், 7 சதவீதமும், 2 சதவீதம் கிறிஸ்துவர்களும், ஜெயின், ரெட்டி போன்ற இதர சமூகத்தினர் 5 சதவீதம் பேர் வாக்கு வங்கியை வைத்துள்ளார்கள். இதுவரை திருப்பத்தூர் தொகுதி தி.மு.க கட்சியின் உடைக்க முடியாத கோட்டையாக இருந்து வருகிறது.

1952 ல் நடைப்பெற்ற முதல் தேர்தலில். காங்கிரஸை வீழ்த்தி வெற்றி பெற்றார் சுயேட்சையாக வேட்பாளரான ராகவ முதலியார். 1957ல் சுயேட்சை வேட்பாளரை வீழ்த்தி காங்கிரஸ் முதல் முறையாக வெற்றி பெற்றது. அதனையடுத்து வந்த 5 தேர்தலில் தி.மு.க தொடர்ந்து வெற்றி பெற்று திருப்பத்தூரை கோட்டையாக்கி தன் வசப்படுத்திக் கொண்டது.

1984ல் தி.மு.கவை வீழ்த்தி காங்கிரஸ் இரண்டாவது முறையாக வெற்றிப்பெற்றது. 1985 இடைத்தேர்தலில் காங்கிரஸ் மீண்டும் வெற்றியை தக்கவைத்துக் கொண்டது, அதன்பிறகு 1989 மீண்டும் தி.மு.கவும், 1991ல் ராஜீவ் படுகொலையின்போது நடைபெற்ற தேர்தலிலும், 2ஜி ஊழல் பெரிதாக பேசப்பட்ட 2021 தேர்தல் உள்பட அ.தி.மு.க 2 முறை மட்டுமே தி.மு.க கோட்டையில் ஆதிக்கம் செலுத்தியது.

2001 - 2006 ல் அ.தி.மு.க மற்றும் தி.மு.க கூட்டணியில் பா.ம.க 2 முறை தொடர்ந்து வெற்றிக் கனியை பறித்தது.

2016, 2021 தேர்தலில் தொடர்ந்து வெற்றியை தக்கவைத்த தி.மு.க, 2026ல் நடைப்பெற போகும் தேர்தலில் தொடர்ந்து மூன்றாவது முறையாக வென்று தனது கோட்டையை தக்கவைக்குமா?

என பொருத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

2026 ல் தி.மு.க வென்றால் தொடர்ந்து மூன்றாவது முறையாக வென்ற கட்சியாகவும் . இந்த தொகுதியில் அதிக முறை ( 9) வென்ற கட்சி தி.மு.க என்ற சாதனையை படைக்கும்.

திமுகவில் யாருக்கு சீட்..?

சாலை வசதிகள், ரேசன் கடைகள் என தொகுதி முழுவதும் ஓரளவிற்கு நிறைவேற்றியதை தவிர்த்து, சொல்லிக் கொள்ளும்படி பெரிய திட்டங்கள் ஏதுமில்லை.



நல்லத்தம்பி



திருப்பதி

அ.தி.மு.க ஆட்சியில் கலைக் கல்லூரி கொண்டுவரப்பட்டது. பிரமாண்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காவல்துறை அலுவலகம் கட்டப்பட்டது. இவைதவிர மாவட்டத்திற்கு தேவையான மருத்துவ கல்லூரி,பொறியியல் கல்லூரி, பூங்காக்கள், பஸ்நிலையம் விரிவாக்கம், ஆவின் பால் பண்ணை, சிப்காட், பள்ளிக்கூடங்கள் விரிவாக்கம், மாவட்டத்திற்கென்று மத்திய கூட்டுறவு வங்கி, பாதாள சாக்கடை திட்டம், குடிநீர் தட்டுப்பாடு, நகரத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளிகளில் போதிய கட்டிட வசதிகள் ஏற்படுத்தி மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்தாமல், மூடு விழாவுக்கு தள்ளப்பட்டுள்ளது, நகரத்திற்குள் கடும் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த போதிய நடவடிக்கை எடுக்காதது, போன்ற பெரிய திட்டங்களை செய்யாமல் கோட்டை விட்ட எம்.எல்.ஏ நல்லதம்பி, 10 வருட பதவியில் தனது அருணா கன்ஸ்ட்ரக்ஷனை தான் பெரிதாக்கி கொண்டார் என்கின்றனர் உடன்பிறப்புகள்.

எடப்பாடி பழனிச்சாமியின் வெள்ளாளர் சமூகத்தை சேர்ந்தவர் என்பதால் எடப்பாடி முதல்வராக இருந்த போது அவரை சந்தித்து காண்ட்ராக்ட் தொழில் வளத்தை பெருக்கியவர் என அப்போது பேச்சுக்கள் எழுந்தன. ஏலகிரி மலையில் ரிசார்ட்ஸ், திருப்பத்தூர், காட்பாடி, வேலூர், ஆரணி . சென்னை வரை பினாமி பெயர்களில் சொத்துக்கள் நீளுகிறது. சி.எம் மாப்பிள்ளையின் குட் புக்கிலும், மாவட்டத்தின் பொருப்பு அமைச்சரை அப்பா ஸ்தானத்தில் பார்ப்பதால், மீண்டும் எங்கள் தம்பிகுதான் தான் சீட் உறுதி. மூன்றாவது முறை வென்று மந்திரியாவார் என்கின்றனர் கட்சியின் சீனியர் உடன்பிறப்புகள்.

அடுத்ததாக மறைந்த அ.தி.மு.க எம்.எல்.ஏ கேஜி ரமேஷ் இடம் சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியுற்றவர் எஸ்.ராஜேந்திரன். இவரும் வெள்ளாளர் சமூகத்தை சேர்ந்தவர். மறைந்த அண்ணாமலை கவுண்டர், நல்லத்தம்பி எம்.எல்.ஏ வின் அப்பா அண்ணாதுரையோடு அரசியல் பழகியவர் தொகுதிக்குள் இவரை தெரியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. கலைஞரின் முரட்டு பக்தரான இவருக்கு அவர் தலைமையில் தான் திருமணம் நடந்தது. தொடர்ந்து 25 ஆண்டுகளுக்கு மேலாக. திருப்பத்தூர் நகர கழக செயலாளராக இருந்து வருகிறார். திருமணத்திற்கு பிறகு பஞ்சாயத்தெல்லாம் செய்வதில்லை. அதற்குப் பதிலாக வாண்டடாக வண்டியில் ஏறி, கட்சி பேதமின்றி தொகுதி மக்களின் வீட்டு விசேஷங்களில் பங்கெடுத்து வருகிறார்.

குறிப்பாக கட்சி தொண்டர்களின் நிகழ்வுகளில் தவறாமல் ஆஜாராகி விடுகிறார். இவர் பழைய எஸ்.ஆர் இல்லைங்க என்கிறார்கள் அவரோடு இருக்கும் உடன்பிறப்புகள், அவர்கள் சொல்வதற்கு தகுந்தார் போலவே. எஸ்.ராஜேந்திரன் என்ற பெயரை வழக்குறைஞர் சு. இரேசேந்திரன் என தூய தமிழில் நியூமராலஜிப்படி மாற்றிக்கொண்டுள்ளார். நெற்றியில் திலகமில்லாமல் வெளியே வருவதில்லை. பிரபல ஜோதிடர் ஒருவர் அண்ணனை அந்த அளவுக்கு மாற்றியுள்ளார். கண்டிப்பாக பாருங்க மந்திரி காந்தி ஆசியுடன் இம்முறை எம்.எல்.ஏ வாகி விடுவார் என அடித்து சொல்லுகிறார்கள் அவரது நட்பு வட்டதினர்.

இவர்களைத் தவீர, மாவட்ட துணை செயலாளர் ஜிம் மோகன், அறங்காவலர் குழு தலைவர் சந்திரசேகர், டி.என்.டி.சுபாஷ் ஆகியோரும் தி.மு.க தரப்பில் சீட் கேட்டு வருவதாக கூறப்படுகிறது.



ராஜேந்திரன்



டி.டி.சங்கர்

இவரைத் தொடர்ந்து, மாஜியின் பினாமியான டி.டி.சங்கர், 2016ல் ரஜினி மன்ற நிர்வாகியாக இருந்தவர். மாஜி வீரமணி ஆசியோடு அ.தி.மு.கவில் ஐக்கியமாகி மாவட்ட பாசறை செயலாளர். நகரத்தில் வார்டு கவுன்சிலர். சமீபத்தில் கந்திலி கிழக்கு ஒன்றிய செயலாளராக்கப்பட்டவர். இப்படி எல்லா வைகையிலும் கிடுகிடுவென உயர்ந்து நிர்கிறார்.

இவர் அகமுடையார் சமூகத்தை சேர்ந்தவர். நகரத்தை தவிர்த்து சுற்றியுள்ள பகுதிகளில் வன்னியர்கள், வெள்ளாளர்கள், ,தாழ்த்தப்பட்டவர்கள் என நிறைந்த தொகுதி. இந்த தொகுதிக்கு தெரியாத முகமாகவும் இருக்கிறார். வீரமணியின் கட்டுபாட்டில் இவர் இருப்பதால் சீட்டு நிச்சயம் என்கிறார்கள் அவரது ஆதரவாளர்கள். சங்கருக்கு சீட் வழங்கினால் தோற்பது நிச்சயம். தி.மு.க சுலபமாக வெற்றி பெறும் என்கிற குரல்களும் ஓங்கி ஒலிக்கிறது.

சங்கரை சம்பந்தமே இல்லாத ஒன்றியத்திற்கு செயலாளராக்கிய மாஜிக்கு எதிரான கண்டன குரல் இன்னும் ஓய்ந்தபாடில்லை. ஒன்றிய செயலாளரை மாற்றாத காரணத்தால் கந்திலி கிழக்கு ஒன்றிய அ.தி.மு.கவினர் சிலர் தி.மு.க வுக்கு தாவி மாஜிக்கு பயத்தை காட்டி வருகின்றனர்.

இவர்களைத் தவிர ஏற்கனவே தோல்வியை சந்தித்த டி.டி.குமார், டாக்டர் லீலாவதி கணவர் சுப்பிரமணியம், வக்கீல் ரவிக்குமார் ஆகியோரும் விரிசை கட்டி நிற்கிறார்கள்.

அ.தி.மு.கவில் யாருக்கு வாய்ப்பு..? என்பதை பார்ப்போம்.

கடந்த 13 ஆம் தேதியன்று திருப்பத்தூர் தொகுதியில் தேர்தல் சுற்றுப்பயணத்தில் ஈடுபட்ட எடப்பாடி பழனிச்சாமி . ஏலகிரி மலையில் பிரச்சாரம் செய்யும் போது மாஜி வீரமணியை தன் பக்கத்தில் வைத்துக்கொண்டே ஜோலார்பேட்டை தொகுதி கூட்டணி கட்சிக்கு ஒதுக்கப்பட்டாலும் அவர்களை வெற்றி பெற வைக்க வேண்டும் என்றார். மேலும் திருப்பத்தூரில் அ.தி.மு.க வெல்ல வேண்டும் என்றாராம். அதனாலதான், மாஜியே ஜோலார்பேட்டை தொகுதியை விட திருப்பத்தூர் தொகுதியில் களத்தில் இறங்கி, தி.மு.க கோட்டையான திருப்பத்தூரை வென்று திருப்புமுனையை ஏற்படுத்துவேன் என நிர்வாகிகளிடம் சபதமேற்றுள்ளதாக கூறுகின்றனர்.

அ.தி.மு.கவில் கால்நடை மருத்துவரான டாக்டர் திருப்பதி, ஒன்றிய சேர்மனாக இருந்தவர். தற்போது ஒன்றிய செயலாளராக இருக்கும் இவர், வசதி படைத்தவர். எடப்பாடி பழனிச்சாமி சமூகமான வெள்ளாளர் கவுண்டர் சமூகத்தை சேர்ந்தவர். இந்த சமூகத்தினர் தொகுதி முழுவதும் கணிசமாக நிறைந்துள்ளனர். அமைதியான, அன்பான, ஆர்பாட்டமில்லாத அரசியல்வாதி. தொகுதி முழுவதும் இவரை அறியாதவர்கள் இல்லை. கொடுக்கும் தொகையை பெற்றுக் கொண்டு ஒரு சேவையாகவே கால்நடைகளுக்கு மருத்துவம் பார்த்து வருகிறார். மாற்று கட்சியினர் மத்தியிலும் நற்பெயரை கொண்டவர். ஆரம்பகாலம் தொட்டு அ.தி.மு.க குடும்பத்தைச் சார்ந்தவர். இந்த முறை எங்க டாக்டருக்கு தான் சீட்' அதை மேலிடமே உறுதி செய்துவிட்டது என்கிறார்கள் எம்.ஜி.ஆரின் பக்தர்கள்.

திருப்பத்தூர் தொகுதியில் மாஜி வீரமணியே களத்தில் இறங்குவதால், தி.மு.க கோட்டையில் தொடர்ந்து இரண்டு முறை வெற்றி வாகை சூடிய எம்.எல்.ஏ நல்லதம்பி, மூன்றாவது முறை வென்று மந்திரியாகி விடலாம் என இருப்பவருக்கு. இந்த தேர்தலில் வெற்றி எளிதாக கிட்டாது. விஜய். சீமான் போன்ற நடிகர்கள் கட்சிகயில் பலர் போட்டியிட்டாலும், நல்லதம்பி VS திருப்பதிக்கு (பங்காளிகளுக்கு இடையேதான்) பலமான போட்டி இருக்க போகிறது என்ற குரல் இரு கழகங்களிடம் கேட்க தொடங்கியுள்ளது.

தொடர்ந்து தி.மு.க மூன்றாவது முறைவென்று ஹாட்ரிக் நிகழ்த்துமா..? அல்லது அ.தி.மு.க. வென்று திருப்பத்தூரில் திருப்புமுனையை ஏற்படுத்துமா.? என பொருத்திருந்து பார்போம். ■

# விஜய்யை அடக்க உதயநிதியின் ப்ளான் –B

# அ.தி.மு.க – தி.மு.க அண்டர் டீலிங்..!

**சிலருக்கு பதவியில் இல்லாவிட்டால் பைத்தியமே பிடித்து விடும். சிலர், இந்த கட்சியே தன்னால் தான் இயங்குகிறது. நான் மட்டும் இல்லை என்றால் என்ன ஆகும் தெரியுமா? என்று இறுமாப்புடன் நடந்து கொள்வார்கள். ஆனால் சிலர் மட்டும்தான் வந்தால் மல. போனால்..? என தூக்கியெறிந்து அடுத்த வேலைக்குப் போய்விடுவார்கள் என்றபடியே முன்னால் வைக்கப்பட்டிருந்த அவள் கொழுக்கட்டையை ருசிக்க ஆரம்பித்தார் அலெர்ட் ஆறுமுகம்.**

ஒதுங்கிப்போகும் அண்ணாமலையை பா.ஜ.க விடுவதாகத் தெரியவில்லையே எனக் கேட்டதும், தலைவர் பதவி பறிபோனதில் இருந்தே எந்தப்பொறுப்பிலும் இல்லாமல் இருக்கிறார் அண்ணாமலை. அந்த அதிருப்தியை வெளிப்படுத்தும் வகையில் சில விஷயங்கள் மூலம் தலைமைக்கு உணர்த்தி வந்தார். அதை சாக்காக வைத்து பா.ஜ.கவில் அவரது வளர்ச்சியை பொறுத்துக் கொள்ள முடியாத சிலர், அவருக்கு எதிரான அஸ்திரங்களை ஏவி வருகிறார்கள். அண்ணாமலை, அமித் ஷா, மோடியுடன் நேரடியாக பேசக்கூடியவர்.

பல வித்தைகள் அண்ணாமலைக்கு தெரியும். பிராமின் பார்ட்டிகளுக்கு அது தெரியாது. இப்போது உள்ள தமிழக பா.ஜ.க காரர்களுக்கு அண்ணாமலைதான் அரசியல் கற்றுக் கொடுத்திருக்கிறார். அதனால், அண்ணாமலையை அவர்களால் இயக்க முடியவில்லை. இப்போது பிராமணர் கூட்டம் அண்ணாமலையை கருவறுக்கப்பார்க்கிறது. எல்லோரும் சேர்ந்து அண்ணாமலையை பழிவாங்கத் துடிக்கிறார்கள் என்கிறது ஒரு தரப்பு.




இன்னொரு தரப்போ, அண்ணாமலை தமிழகத்தில் பா.ஜ.கவுக்கு ஒரு புத்துணர்ச்சியை கொண்டு வந்தவர். படித்தவர், விஷயத்தை புரிந்து கொண்டவர். அதிகாரியாக தான் அரசியல்வாதியாக நுழைந்தவர். மோடியின் நிழலில் வளர்ந்தவர். மத்திய பா.ஜ.க ஒரு மாநிலத்திற்கு மூன்று வருடம் முடிந்தபின் தலைவரை மாற்றி விடுவார்கள். அந்த ரீதியில்தான் அண்ணாமலையை மாற்றினார்கள்.

நயினார் நாகேந்திரன் மத்திய பா.ஜ.க தலைமையால் அந்த இடத்திற்கு கொண்டுவரப்பட்டார். காரணம் அண்ணாமலை, எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக பேச ஆரம்பித்ததை மத்திய பா.ஜ.க ரசிக்கவில்லை. அண்ணாமலையின் வீச்சிக்கு அதுதான் காரணம். அவர்

மீது இருக்கக்கூடிய குற்றச்சாட்டு அண்ணாமலையினுடைய பேச்சு. பா.ஜ.க பொது குழுவில் தேசிய அரசியல் நிலைமையை பற்றி மூன்று பக்க அரசியல் தீர்மானத்தை வழிமொழிந்தார் அண்ணாமலை. முன்மொழிந்தது யோகி ஆதித்யாநாத். அந்தளவு முக்கியத்துவம் கொடுத்தார்கள். பா.ஜ.கவில் ஜெ.பி.நட்டாவுக்கு அடுத்து வரக்கூடிய தலைவராக கண்டிப்பாக அண்ணாமலைக்கு ஒரு முக்கிய பதவி தர இருக்கிறார்கள். அதுவரை அவர் பொறுத்து இருக்க வேண்டும் என்பதுதான் பா.ஜ.கவினுடைய விருப்பம் என்கிறது. ஆக மொத்தத்தில் அண்ணாமலையை விட்டுப்பிடிக்க நினைக்கிறது பா.ஜ.க என்ற அலெர்ட்டாரிடம், விஜய்யின் மக்கள் சந்திப்பால் தி.மு.க திகிலடைந்து கிடப்பதாக கூறப்படுகிறதே என்றோம்.

அந்த மேட்டருக்குத்தான் நான் வர்றேன்.. வரும் தேர்தலில் அதிகளவில் தி.மு.கவில் உள்ள இளைஞர்களுக்கு வாய்ப்புகள் கொடுக்க வேண்டும் என எதிர்பார்க்கிறார் உதயநிதி. 2021ல் தி.மு.க கூட்டணி கட்சிகளுக்கு சுமார் 57 தொகுதிகளை ஒதுக்கியது. தி.மு.க 177 தொகுதிகளில் போட்டியிட்டது. இந்த முறை கூட்டணி கட்சிகள் அதிக தொகுதிகளை எதிர்பார்கிறார்கள். ஆனால், சென்றமுறையைப் போலவே கூட்டணி கட்சிகளை குறைவான எண்ணிக்கையில் அடக்கிவிட வேண்டும் என கணக்குப் போட்டு வருகிறது தி.மு.க.

உதயநிதி ஸ்டாலினை பொறுத்தவரை மூன்றில் ஒரு பங்காவது இளைஞரணி, மாணவரணியினருக்கு சீட் கொடுக்க வேண்டும் என எதிர்பார்க்கிறார். இப்போதைக்கு குறைவில்லாமல் நாற்பதில் இருந்து 50 சீட்டுகள் உதயநிதி கோட்டாவுக்கு ஒதுக்கப்படும் என இளைஞரணி, மாணவர் அணியினர் எதிர்பார்க்கிறார்கள். இதற்கு ஒரு வகையில தி.மு.கவில் இருக்கும் இளைஞர்கள், மாணவர் அணியினர் உள்ளிட்ட பலரும் விஜய்க்கு நன்றி தெரிவிக்கிறார்கள். ஏனென்றால் விஜய்யின் வருகையால் த.வெ. கவில் அதிக அளவில் இளைஞர் பட்டாளம்




மு.க.ஸ்டாலின்



எடப்பாடி



செங்கோட்டையன்



அமித்ஷா

பயணிக்கிறது. இன்னொரு பக்கம் கிட்டத்தட்ட 87 லட்சம் புதிய இளைய சமூகத்தினரின் வாக்குகளும் இருக்கிறது.

பல்வேறு தேர்தல்களில் வெற்றி, தோல்வியை தீர்மானிப்பதில் இளைஞர்களின் பங்கு முக்கியமாக இருக்கிறது. கடந்த தேர்தலில் கிட்டத்தட்ட 25 தொகுதிகளில் வெறும் 5 ஆயிரம் வாக்குகளுக்கும் குறைவாகத்தான் வெற்றி, தோல்வி நிர்ணயம் செய்யப்பட்டு இருக்கிறது. அந்த 5 ஆயிரம் வாக்குகள் ஒவ்வொரு தொகுதியிலும் இளைய சமுதாயம் ஆளும் கட்சிக்கு எதிராக வாக்களித்துவிட்டால் அது தி.மு.கவுக்கு மிகவும் பாதிப்பை ஏற்படுத்தும். இதைத் தடுக்க அதிக அளவிலான புதியவர்களுக்கு, இளைஞர்களுக்கு, பெண்களுக்கு சீட் கொடுக்க வேண்டும் என உதயநிதி வலியுறுத்துவதாகவும் அறிவாலயம் வட்டாரங்களில் கூறப்படுகிறது. தி.மு.கவின் இந்த முடிவுக்கு விஜய்யின் அச்சுறுத்தலே காரணம் என்றவரிடம், லெமன் ஜூஸை நீட்டினோம்.

செங்கோட்டையனின் பத்து நாள் சபதம் அவ்வளவுதானா..? என்றதும், செங்கோட்டையனிடம் முன்பிருந்த கொதி நிலை இப்போது மிஸ்ஸிங். இந்த இடைப்பட்ட நாட்களில் அவர் எதிர்பார்த்த ஒரு பலம் கிடைக்கும். ஒரு ஆக்சன் இருக்கும் என எதிர்பார்த்தார். ஆனால், பெரிய அளவில் மாற்றங்கள் நிகழவில்லை.

முக்கியமாக செங்கோட்டையனின் தீவிரமான ஆதரவாளரான பவானிசாகர் சட்டமன்ற உறுப்பினரான பன்னாரி. எடப்பாடி பழனிசாமியிடம் முன்பே போய் சரணடைந்து விட்டார். எடப்பாடி பழனிசாமி சமாதானம் முயற்சிக்கு வருவார் என எதிர்பார்த்தார். ஆனால், அவர் கட்சிப் பொறுப்பில் இருந்து நீக்கி அதிரடி காட்ட, செங்கோட்டையனை வைத்து பல்ஸ் பார்க்க பின்னால் இருந்த சுமார் பத்து மாஜிக்களுக்கு அப்படியே ஷாக். பிறகு பார்த்துக் கொள்ளலாம் என அப்படியே

மெல்ல பின் வாங்கிவிட்டார்கள்.

இந்த 10 நாளிலேயே கோபியை தாண்டி பெரிதாக மேற்கு மண்டலத்தில் இருந்தேகூட பெரிய அளவில் ஆதரவாளர்கள் எல்லாம் செங்கோட்டையன் பார்க்க, குவிந்த ஆதரவாளர்களும் கூட பலர் சந்திக்கவில்லை. அடுத்து செங்கோட்டையன் தொடர்ந்து என்னுடன் போனில் பேசிக்கொண்டு இருக்கிறார் வெடியை போட்டார். செங்கோட்டையனுடன் சசிகலா, தினகரன் எல்லோரும் சந்திக்கக்கூடிய நாள் விரைவில் வரும் என எடப்பாடி பழனிசாமியை அட்டாக் செய்வதாக சொன்னது செங்கோட்டையனுக்கு எதிரான நெகட்டிவ் மதிப்பீடை அதிகமாக்கி விட்டது. இதையெல்லாம் வைத்து எடப்பாடி பழனிசாமியின் செங்கோட்டையன் இப்படி கட்சிக்கு எதிராக தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

பொதுச் செயலாளருக்கு எந்த ஒரு விஷயத்தையும் தெரிவிப்பது இல்லை. ஏன் அவர் மேல் நடவடிக்கை எடுக்கக்கூடாது என அவர் மீது ஆக்சன் எடுப்பதற்கான காரணங்களை சேகரித்து வைத்திருக்கிறார். செங்கோட்டையன் அவரது செயல்களாலேயே எக்ஸ்போஸ் ஆகிக்கொண்டு இருக்கிறார். அவர் இனிமேல் கட்சியில் இருந்தாலும், இல்லாமல் போனாலும் அது நமக்கு பாதகம் அல்ல, சாதகம் தான் என ரொம்ப இயல்பாக ஹேண்டில் பண்ணவும் தொடங்கியிருக்கிறார் எடப்பாடி. விரைவில் செங்கோட்டையன் மீது அடுத்த நடவடிக்கை பாய்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்றவர் இடைவிடாமல் தொடர்ந்தார்.

தமிழகத்தின் அ.தி.மு.க முன்னாள் அமைச்சர்களை இந்த மு.க.ஸ்டாலின் அரசு காப்பாற்றுகிறது. கிட்டத்தட்ட 9 அமைச்சர்கள் காப்பாற்றப்படுகிறார்கள். அ.தி.மு.க மாஜி அமைச்சர்களின் ஆயிரம் இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை சோதனை நடத்தி இருக்கிறது. அந்த ஒன்பது அமைச்சர்களில் தங்கமணி, எஸ்.பி.வேலுமணி, வீரமணி, இரு விஜயபாஸ்கர்கள், சேவூர் ராமச்சந்திரன் என இப்படி லிஸ்ட் போகிறது.



உதயநிதி



சசிகலா



விஜய்

ஆயிரம் இடத்தில ரெய்டு செய்து மூன்று பேர்மீதுதான் வழக்குப்போடப்பட்டுள்ளது. அந்த மாஜி அமைச்சர்கள் யாரெல்லாம் எந்த காண்ட்ராக்டர்களிடம் லஞ்சம் வாங்கினார்களோ, அதற்கு துணை நின்ற அந்த ஐ.ஏ.எஸ் அதிகாரிகளும், காண்டரக்டர்களும் இப்போது தி.மு.கவோடு இருக்கிறார்கள். அதே ஐ.ஏ.எஸ் அதிகாரியை வைத்துக்கொண்டு தான் தி.மு.க அரசு இப்போது செயல்பட்டு வருகிறது. உதாரணமாக ரேஷன் பொருட்களை கிறிஸ்டி என்ற நிறுவனத்துக்கு கடந்த ஆட்சியில் ஒப்பந்தம் கொடுக்கப்பட்டது. இன்றைக்கும் அதே கிறிஸ்டி நிறுவனத்துக்கு தான் காண்ட்ராக்ட் கொடுத்து இருக்கிறார்கள்.

தி.மு.க அ.தி.மு.க இரண்டு பேருக்கும் ஒரு அண்டர்ஸ்டாண்டிங் வந்துவிட்டது. நான் உங்க பேரில் வெறும் ரெய்டு விடுகிறேன். செய்தி மட்டும் வரும். உங்கள் பேரில் எந்த நடவடிக்கையும் இருக்காது. நாங்க மற்றதை பார்த்துக் கொள்கிறோம் என ஒரு அண்டர்ஸ்டாண்ட் வந்துவிட்டதாக கூறப்படுகிறது. கோபாலபுரத்திலயே சசிகலாவுக்கு ஏதாவது ஒரு பங்கு இருக்குமோ? காப்பாற்றப்படுவதற்காக இவங்களுடைய பணம் ஏதாவது அவர்கள் கைக்கு மாறி இருக்குமோ? என்கிற சந்தேகமும் எழுகிறது. சசிகலாவிற்கு சொந்தமாக படப்பையில் ஒரு மதுபான தயாரிப்பு நிறுவனம் இருக்கிறது. அதை நடத்த முடியவில்லை என இப்போது லீசுக்கு கொடுத்து இருக்கிறார். அது தி.மு.கவிற்கு வேண்டியவர்களின் கையில்தான் இருக்கிறது. நாங்க ரெண்டு பேரும் பங்காளிகள் என்று துரைமுருகனே சொல்லி இருக்கிறார்.

இப்போதுவரை தி.மு.க ஒருமுறைகூட அடுத்தடுத்து ஜெயித்ததில்லை. அந்த ரெக்கார்டு பிரேக் இப்போது உடைக்கப்படும் என்கிற எதிர்பார்ப்பும் உள்ளது. எதிர்கட்சிகளை சரிக்கட்டி காப்பாற்றும் அந்த வேலையை சூப்பர் சீப் மினிஸ்டரின், ஈ.சி.ஆர் பங்களாவில் இருக்கிற மாப்பிள்ளை சார் செய்கிறார் என்கிற தகவல் புகைச்சலைக் கிளப்பியுள்ளது என்றவர், சரி சரி, டெல்லிக்கு கிளம்பணும். சோர்ஸ் கூப்பிடுகிறது எனக் கிளம்பினார் அலெர்ட்டார். ■



# சுற்றி வளைக்கப்படும் எடப்பாடி..?

# நெருக்கடியில் அ.தி.மு.க..?

## கலக்கத்தில் தொண்டர்கள்

**அ.தி.மு.கவில் 2016 ஆம் ஆண்டு ஜெயலலிதா இறந்தவுடன் வெடித்த மோதல்கள் இன்னும் ஓயவில்லை. அடித்துப் பிடித்து ஒருவழியாக பொதுச் செயலாளர் பதவியில் அமர்ந்தாலும், எடப்பாடி பழனிசாமிக்கு இன்னும் முழுமையாக ரூட் கிளியராகவில்லை. தேர்தல் நெருங்கும் சூழலில், எடப்பாடி பழனிச்சாமியை செங்கோட்டையன், ஓ.பி.எஸ், தினகரன், சசிகலா என பலமுனைகளில் இருந்தும் சுற்றி வளைத்திருக்கிறார்கள். அ.தி.மு.கவின் அடுத்த கட்ட நகர்வுகள் எப்படி இருக்கும் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.**

2026 சட்டப்பேரவை தேர்தல் நெருங்கி கொண்டிருக்கும் வேலையில், ஆட்சியை மீண்டும் பிடித்துவிடுவோம் என்று உறுதியோடு நிற்கிறது தி.மு.க. ஆனால், பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.கவில் இடியாப்ப சிக்கல் இன்னும் தீரவில்லை. மிஞ்சியும், கெஞ்சியும் பார்த்தும் மீண்டும் அ.தி.மு.கவில் அடைக்கலம் கிடைக்காத விரக்தியோடு, பா.ஜ.க.வும் பாதகம் செய்துவிட்ட வருத்தத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து வெளியேறினார் ஓ.பி.எஸ். அதேபோல், எங்களுக்கு துரோகம் செய்த எடப்பாடி இருக்கும் பக்கம் தப்பித் தவறியும் இருக்க மாட்டோம் என சபதம் போட்டு, கூட்டணியிலிருந்து வெளியேறிவிட்டார் டி.டி.வி.தினகரன்.

இந்த சூழலில்தான், எடப்பாடி பழனிசாமியின் கொங்கு மண்டலத்தை சேர்ந்த அ.தி.மு.க மூத்த தலைவர் செங்கோட்டையனும், தன் பங்குக்கு நெருக்கடியை ஆரம்பித்துள்ளார். பிரிந்து சென்ற எல்லோரையும் ஒருங்கிணைக்க வேண்டும் என்ற கோஷத்தை வலுவாக முன்வைக்கிறார் அவர். வழக்கம்போல சசிகலாவும், அ.தி.மு.கவை நிச்சயமாக ஒன்றிணைப்பேன் என்று அதே பல்லவியை பாடிக் கொண்டிருக்கிறார்.




ஓ.பி.எஸ்

ஆனால், அதிகாரபூர்வமாக இப்போது அ.தி.மு.கவை கையில் வைத்துள்ள எடப்பாடி பழனிசாமி, ஒருங்கிணைப்பும் கிடையாது, சமாதானமும் கிடையாது என பிடிவாதமாக மறுத்து வருகிறார். ஆட்சியை கவிழ்க்க முயன்ற துரோகிகளுக்கு கட்சியில் மீண்டும் இடமில்லை. ஆட்சி அதிகாரத்தை விட தன்மானமே முக்கியம் என்று பஞ்ச் லயலாக் அடித்து பதற வைத்துள்ளார். எடப்பாடி பழனிசாமி இப்போது ஒரு கணக்கில் இருக்கிறார்.



தினகரன்

அதாவது, 2024 தேர்தலில் அ.தி.மு.க கூட்டணிக்கு 23 சதவீத வாக்குகளும், பா.ஜ.க கூட்டணிக்கு 18 சதவீத வாக்குகளும் கிடைத்தது. இதனை கூட்டினால் 41 சதவீதம் வருகிறது. அதாவது, தி.மு.க கூட்டணி பெற்ற 46 சதவீத வாக்குகளுக்கு பக்கத்தில் இது வருகிறது. எனவே, தற்போதையதி.மு.க ஆட்சிக்கு எதிரான மனநிலையும், தனது சுற்றுப் பயணத்தில் கிடைத்த எழுச்சியையும் வைத்து எப்படியும் அடுத்த முதல்வர் நான்தான் என்று முடிவே செய்துவிட்டார் எடப்பாடி பழனிச்சாமி.



சசிகலா

ஆனால், எடப்பாடி பழனிச்சாமி ஒரு விஷயத்தை மறந்துவிட்டார். அதாவது, 2024 ஆண்டு அ.தி.மு.க கூட்டணியில் தே.மு.தி.க, எஸ்.டி.பி.ஐ இருந்தது. அவர்கள் இப்போது இல்லை. அதேபோல பா.ஜ.க கூட்டணியில் இருந்த பா.ம.க, ஓ.பி.எஸ், டி.டி.வி.தினகரன் இப்போது அவர்களோடு இல்லை. எனவே, இந்த வகையில் பார்த்தாலே 7 முதல் 10 சதவீத வாக்குகள் குறையும். அதேபோல, 2024 ல் பா.ஜ.க கூட்டணியில் இல்லாததால் கணிசமான சிறுபான்மை வாக்குகள் அ.தி.மு.கவுக்கு கிடைத்தன. 2026 ல் அது நிச்சயம் கிடைக்காது. எனவே அந்த வகையில் ஒரு சரிவு இருக்கும் என்கின்றனர் அரசியல் நோக்கர்கள்.

அதனால், வெற்றி உறுதி என்ற நிலையில் எல்லாம் அ.தி.மு.க - பா.ஜ.க கூட்டணி இல்லை. உறுதியான கூட்டணியோடு, தெளிவான வியூகத்தோடு இறங்கினால் மட்டுமே அ.தி.மு.கவால், தி.மு.க கூட்டணியை பலத்தோடு எதிர்க்கவே முடியும். ஆனால், அ.தி.மு.கவிலும் சரி, அதன் கூட்டணியிலும் சரி, இலையுதிர் காலம் போல எல்லோரும் உதிர்ந்து கொண்டுள்ளார்கள்.

இருப்பினும் இதையெல்லாம் பெரிதாக எடுத்துக்கொள்ளாமல், உடும்பு பிடியாக நிற்கிறார் எடப்பாடி பழனிசாமி. தேர்தலில் சில நூறு வாக்குகள் கூட பெரும் மாற்றத்தை உருவாக்கும். கடந்த 2021 தேர்தலில் 40 தொகுதிகளில் வெற்றி தோல்வி மிகக் குறைவான வாக்குகளில் மாறிப்போனது. எனவே, சிறிய கட்சியை இழப்பதுகூட கூட்டணிக்கு பெரும் சரிவை உருவாக்கும் என்கின்றனர் அரசியல் கணிப்பாளர்கள்.

எடப்பாடி பழனிச்சாமியும், அவருக்கு எதிராக நிற்பவர்களும் ஒன்றிணைவது கிட்டத்திட்ட இனி சாத்தியமில்லை. ஆனால், அதனால் இழப்பு என்பது எடப்பாடி பழனிச்சாமிக்குதான் ஏற்படும். ஏனென்றால், அவர்தான் பிரதான

எதிர்க்கட்சி தலைவர், வலுவான கூட்டணியின் முதல்வர் வேட்பாளர். தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெற்றால் முதல்வராகப் போவது எடப்பாடி பழனிச்சாமி தான். ஓ.பி.எஸ்சோ, டி.டி.வி.தினகரனோ, சசிகலாவோ அல்லது செங்கோட்டையனோ அல்ல.



செங்கோட்டையன்

எனவே, அனைவரையும் அனுசரித்து செல்லவேண்டியது எடப்பாடி பழனிச்சாமிக்கு மிக முக்கியமானது. ஒருவேளை ஓ.பி.எஸ் உள்ளிட்டவர்களை கட்சியில் இணைக்காவிட்டாலும், வேறு வழிமுறைகளின்படி கூட்டணியில் சேர்க்கலாம். டி.டி.வி.தினகரனையும் கூட்டணிக்குள் தக்க வைக்கலாம். இன்னொரு பக்கம் தே.மு.தி.கவும், அ.தி.மு.கவுக்கு எதிரான மனநிலையில் உள்ளது. அவர்களை சமாதானம் செய்து உள்ளே கொண்டுவரலாம். ஆனால், எல்லாவற்றையும் மேலே இருப்பவன் பாத்துப்பான் என்ற மனநிலையில் இருந்தால், எடப்பாடி பழனிச்சாமிக்கு ஒருவேளை நாளை ஆட்சி கிடைத்தாலும், அதனையும் மேலே இருப்பவர்களே பார்த்துக்கொள்வார்கள். அடுத்தடுத்த ஆண்டுகளில் சிவசேனா நிலை அ.தி.மு.கவுக்கு ஏற்பட்டுவிடும் என்கின்றனர் அரசியல் நோக்கர்கள்.



விஜய்

உட்கட்சி குழப்பங்கள் ஒருபக்கம் இருக்க, அ.தி.மு.கவுக்கு பெரும் தலைவலியாக மாறியிருக்கிறது தமிழக வெற்றிக் கழகம். நிச்சயமாக தி.மு.கவுக்கு எதிரான வாக்குகளில் கணிசமான வாக்குகளையும், பொதுமக்களின் கணிசமான வாக்குகளும் இம்முறை விஜய்க்கு கிடைக்கும். அது நிச்சயம் அ.தி.மு.க வாக்கு வங்கிக்கு பாதகத்தை உருவாக்கும். அதேபோன்று டெல்டா மாவட்டங்கள், தென் மாவட்டங்களில் அ.தி.மு.க பழைய வலிமையோடு இல்லை. அங்கே ஓ.பி.எஸ், டி.டி.வி.தினகரன் ஆகியோர் சொல்லிக் கொள்ளும்படியான பாதிப்பை உருவாக்குவார்கள்.

எப்படி பார்த்தாலும், உட்கட்சி பிரச்சினைகள், விஜய்யின் அரசியல் வருகை ஆகியன எடப்பாட பழனிச்சாமிக்கு பெரும் சவாலாக மாறியிருப்பது உண்மை. அ.தி.மு.க இந்த நெருக்கடிகளில் இருந்து எப்படி மீளும் எனப் பார்ப்போம். ■


பரபரப்பு செய்தி

வெளியிட்டாளர்
& ஆசிரியர்
**S.P.இராமநாதன்**
**99405 14136**

இணையாசிரியர்
**ஜோதி சங்கர் .A**
**9444703555**

பொறுப்பாசிரியர்
**நா.இராதாகிருஷ்ணன்**

நிருபர்கள்
**ஜேம்ஸ் நெப்போலியன்**
**இராமநாதபுரம் முஸ்தபா**
**பொங்கு செல்வம்**
**தனசேகர்**
**V.சங்கர்**
**V.செல்வநாயகம்**
**K.மணிகண்டன்**
**குமரிமைந்தன்**
**பாக்யா**

வடிவமைப்பு
**த.கோபாலகிருஷ்ணன்**

நிர்வாக அலுவலகம்
**கதவு எண்: 7/31, A - பிளாக்,**
**நெ.69, கிரிஸ்டல் கோர்ட்,**
**அண்ணா நகர்**
**சென்னை - 600 101**

தொடர்புக்கு
**044 - 26150095**

மின்னஞ்சல்
paraparappuseithiweekly@gmail.com

www.paraparappucheithi.com
paraparappucheithi
paraparappucheithi

# தி.மு.கவிற்கு வேட்டு வைக்கும் வேலுச்சாமி...

## ● உடன் பிறப்புக்கள் குமுறல்...

**திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதி கடந்த 1996 தேர்தலுக்கு பிறகு தற்போது வரை அதாவது, ஐந்து முறை அ.தி.மு.கவே வெற்றி பெற்று வந்துள்ளது. அந்த அளவுக்கு இத்தொகுதியில் அ.தி.மு.கவிற்கு பலமான செல்வாக்கு இருந்து வருகிறது.**



வேலுச்சாமி

இருந்தும், இத்தொகுதியின் நகரப் பகுதியில் எப்போதும் தி.மு.கவின் கையே ஓங்கி இருந்து வருகிறது. 96 ல் தி.மு.க சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற போடிபட்டி தம்பு(எ) செல்வராஜ், நகரச் செயலாளராக இருந்த தங்கமணி மற்றும் திராவிடமணி உட்பட இன்னும் சில மூத்த முன்னோடிகளின் சிறந்த மக்கள் பணிகளால் உடுமலை நகர பகுதியில் தி.மு.க ஒரு அசைக்க முடியாத நிலையில் இருந்து வந்தது. பொதுவாக உடுமலை தொகுதியில், தி.மு.கவின் வெற்றிக்கும் வளர்ச்சிக்கும் 1967,1971,1989 ஆகிய காலங்களில் அமைச்சராக பணியாற்றி இன்று வரை உடுமலை மக்கள் மனதில் நீங்கா இடம்பெற்றுள்ளவரும் தி.மு.க தலைவர் கலைஞர் கருணாநிதியின் நம்பிக்கைக்கும், அன்பிற்கும் உரித்தான வருமான காலஞ்சென்ற முன்னாள் அமைச்சர் சாதிக் பாட்சா தான் காரணம் என்பது யாரும் மறுத்துவிட முடியாது. அதைப் பற்றியும், சாதிக் பாட்சாவின் மக்கள் நலப்பணி மற்றும் கட்சிப் பணிகள் குறித்து சொல்ல வேண்டும் என்றால் இந்த ஒரு இதழ் போதாது. ஆகவே அதனை ஒதுக்கி வைத்து விட்டு உடுமலை தொகுதியில் தி.மு.கவின் தற்போதைய நிலை குறித்து பார்ப்போம்.

மேற்படி கட்சியின் மூத்த முன்னோடிகள் எல்லாம் தங்களின் சுயநலம் பாராமல், கட்சியின் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு கடுமையாக உழைத்து தி.மு.கவின் வாக்கு வங்கியை பேதமில்லாமல் பாதுகாத்து வந்தனர்.

ஆனால், இன்றைக்கு தி.மு.கவின் நிலை நகரமன்றத் தலைவரான மத்தின் போன்றோரின் சிறந்த மக்கள் நலப்பணிகளால் நகரத்திற்குட்பட்ட தி.மு.க வாக்கு வங்கிக்கு பாதிப்பு இல்லை என்றபோதிலும், உட்கட்சி நிலைதான் சற்று கவலைக்கிடமாக உள்ளது. அதற்கு காரணம் தற்போதைய நகரச் செயலாளர் வேலுச்சாமி தான் என்கின்றனர் கட்சிக்காரர்கள்.

வேலுச்சாமி கட்சியில் யாரையும் மதிப்பதில்லை, தனக்கு நிகரான மற்றும் தனக்கு கீழ் உள்ள நிர்வாகிகளைப் பற்றி மாவட்டச் செயலாளர் மற்றும் அமைச்சரிடம் பொய்யான தகவல்களை கூறி, அவர்களை கட்டம் கட்டுவது, பதவிக்காக எந்த நிலைக்கும் இறங்கி செல்வது, தொண்டர்களை சாதி வித்யாசம் பார்த்து கேவலமாக நடத்துவது. சொந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் கமிஷன் அடிப்படையில் தான் காரியம் செய்து கொடுப்பது. கட்சியின் மூத்த முன்னோடிகளை மிக எகத்தாளமாகப் பேசுவது. கட்சிக்குள் ஒருவருக்கொருவர் சிண்டு முடிந்து விடும் சகுனி வேலை பார்ப்பது என்று வேலுச்சாமியைக் குறித்து புகார் வாசிக்கின்றனர் உடன்பிறப்புகள்.

மேலும், சாதாரண மில் தொழிலாளியாக இருந்த வேலுச்சாமி, இன்று பல நூறு கோடிகளுக்கு அதிபதியானது, பொங்கலூர்

பழனிச்சாமிக்கு என்னவெல்லாம் செய்து கொடுத்து அதன் மூலம் கட்சிக்குள் நுழைந்தது, நகரமன்றத் தலைவராக இருந்த போது எதிர்கட்சியினரோடு சேர்ந்து கூட்டுக் கொள்ளை அடித்தது, தற்போதைய செய்தித்துறை அமைச்சர் சாமிநாதன் 2006 2011 ல் நெடுஞ்சாலை துறை அமைச்சராக இருந்த போது அவருக்கு எதிராக பல்வேறு உள்ளடி வேலைகள் செய்தது என அடுக்கிக் கொண்டே போகலாம் என்கின்றனர் மேற்படி உ.பி க்கள்.




முக்கிய பிரமுகர்கள் பெயர் இல்லா நோட்டீஸ்

இப்படி கட்டுச் சோற்றுக்குள் கட்டி வைக்கப்பட்ட பெருச்சாளி போல கட்சியில் நகரச் செயலாளர் என்ற பொறுப்பில் இருந்து கொண்டே கட்சிக்கெதிரான வேலுச்சாமியின் கட்சி விரோத நடவடிக்கைகளை, கட்சி நலன் கருதி வெளிக்காட்டாமல் இருந்து வந்தனர். இந்நிலையில் தான் கட்சியின் 75 வது பவளவிழா மற்றும் உதயநிதி ஸ்டாலின் துணை முதலமைச்சர் பதவியேற்பு விழா பொதுக்கூட்டம் ஒன்று வேலுச்சாமியின் தலைமையில் நடைபெற்றது. அதற்காக அச்சடிக்கப்பட்ட நோட்டீஸில், முன்னாள் எம்.பி சண்முகசுந்தரம், திருப்பூர் தெற்கு மாவட்ட பொருளாளர் முபாரக் அலி மற்றும் நகரமன்றத் தலைவர் மத்தின் ஆகியோரின் பெயர்களை வேண்டுமென்றே புறக்கணிப்பு செய்துள்ளார் வேலுச்சாமி. இதனை சம்மந்தப்பட்டவர்கள் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை என்றாலும் கட்சியின் நலம் விரும்பிகள், இதற்கு மேலும் அமைதியாக இருக்க முடியாது என்று கொந்தளிக்க தொடங்கி உள்ளனர். அந்த கொந்தளிப்பு பெரிதாக உருவெடுத்து வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலில், உடுமலையில் தொடர் தோல்விகளை சந்தித்து வரும் தி.மு.க இம்முறை படுதோல்வி அடையச் செய்து விடும் என்பதே அரசியல் ஆர்வலர்களின் கருத்தாக உள்ளது.



அமைச்சர் சாமிநாதன்



பத்மநாபன்



முபாரக் அலி



மத்தின்

அதனைத் தடுத்திடும் வகையில் திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர் பத்மநாபன் மற்றும் அமைச்சர் சாமிநாதன் ஆகியோர் விரைந்து நடவடிக்கை எடுத்து, வேலுச்சாமியை அடக்கி வைத்தால் எல்லோருக்கும் நல்லது என ஏகமனதாக கூறுகின்றனர் உடுமலை தொகுதி உடன்பிறப்புகள். ■


அமித் ஷா


செங்கோட்டையன்

# அமித்ஷாவிடம் செங்கோட்டையன் பேசியது என்ன..?

## அ.தி.மு.கவில் மீண்டும் ஓ.பி.எஸ்..!

### ● டெல்லிகில்லி சொன்ன அதிரடித்தகவல்கள்!

**அ.தி.மு.க முன்னாள்அமைச்சர் செங்கோட்டையன் ஹரித்துவார் போவதாக சொல்லி விட்டு டில்லியில் திடீரென உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்தித்திருக்கிறார். எடப்பாடி பழனிசாமியால் அ.தி.மு.கவிலிருந்து அதிரடியாக நீக்கப்பட்ட ஒரு நபரை அதே கூட்டணியிலிருக்கும் உள்துறை அமைச்சர் முக்கியத்துவம் கொடுத்து அழைத்துப்பேசியிருப்பது விவரமறிந்தவர்களுக்கு ஒரு வித பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது.**

செங்கோட்டையன் அப்பாயிண்மெண்ட் கேட்காமல், அதுவும் அமித்ஷாவே அப்பாயிண்ட்மென்ட் கொடுத்து செங்கோட்டையனை அழைத்து பேசியதுதான் தனிச்சிறப்பு என்கிறது டெல்லி வட்டாரம்.

அமித்ஷா செங்கோட்டையன் சந்திப்பில் நடந்தது என்ன? என்று டெல்லியின் கில்லியான ஒரு



ஓ.பி.எஸ்



சசிகலா



டி.டி.வி.தினகரன்



எடப்பாடி

முக்கியபிரமுகரிடம் கேட்டோம். அவர்நம்மிடம், செங்கோட்டையன் அ.தி.மு.கவில் மூத்த பிரமுகர். அம்மாவின் விசுவாசியாகவே எப்போதும் இருப்பவர். தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் தெரிந்தவர். அவர் கட்சியிலிருந்து டிஸ்மிஸ் செய்யப்பட்டாலும் அவருக்கு முக்கியத்துவம் கொடுத்து அமித்ஷா அழைத்து பேசியிருக்கிறார். அப்போது அமித்ஷா, பி.ஜே.பியால் அ.தி.மு.க உட்கட்சி விவகாரத்தில் நேரடியாக தலையிட முடியாது. நீங்களே ஒரு குழுவாகச்சென்று பழனிசாமியிடம் பேசிப்பார்த்துவிட்டு எனக்கு தகவல் சொல்லுங்கள்.! எனக்கூறி செங்கோட்டையனை சில மாதங்களுக்கு முன் திருப்பி அனுப்பி விட்டார்கள்.

ஆனால், அதன் தொடர்ச்சியான விஷயங்களை செங்கோட்டையன் டெல்லியிடம் தெரிவிக்கவில்லை. எனவேதான் மீண்டும் செங்கோட்டையன் டெல்லிக்கு அழைக்கப்பட்டார். விவரங்களை கேட்டுக்கொண்டார்கள்.

ஆனால், செங்கோட்டையன் அமித்ஷாவிடம் சசிகலா, ஓ.பி.எஸ் போன்ற முக்குலத்தோர்கள் இல்லாமல் அ.தி.மு.க பி.ஜே.பி கூட்டணி வெல்ல முடியாது. அந்த சமுதாயத்தினர் அமைதியாக இருப்பார்கள். வேடிக்கை பார்ப்பார்கள். ஆனால், அவர்களுக்கென்று பெரும் பாதிப்பு ஏற்பட்டால் எந்த ஆட்சியையும் நீடிக்க விட மாட்டார்கள். அவர்களால் எந்தவொரு ஆட்சியையும் ஏற்படுத்தவும் முடியும். கவிழ்க்கவும் முடியும். இதை நான் தமிழகமெங்கும் அம்மாவுடன் பயணித்த போது தெரிந்து கொண்டேன்.

அ.தி.மு.கவில் மட்டுமல்ல. தி.மு.கவிலும் முக்குலத்தோர்களே அக்கட்சியை கட்டிக்காத்து வருகிறார்கள். கலைஞர் காலத்திலேயே அன்பில் தர்மலிங்கம், ஐ.பெரியசாமி, டி.ஆர்.பாலு, வே.தங்கப்பாண்டியன், பொன் முத்துராமலிங்கம், தா.கிருஷ்ணன், சுப.தங்கவேலன், தற்போது அமைச்சர் தங்கம் தென்னரசு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, அமைச்சர் மூர்த்தி, போன்றோர்கள்தான் கட்சித்தலைமைக்கு நெருக்கமாகவும், அதிகாரத்திலும் உள்ளார்கள்.

வரும் தேர்தலில் ஓட்டுக்கள் பிரியும் நிலை உள்ளதால் 2000 3000 ஓட்டுக்களிலேயே வெற்றி தோல்வி தீர்மானிக்கப்படும். எனவே அ.தி.மு.கவில் அனைவரும் ஒன்றிணைக்கப்பட வேண்டியது அவசியம். கூட்டணி வலிமை பெற்றால்தான் ஆட்சி மாற்றம் ஏற்படும்! என்று தெள்ளத்தெளிவாக கூறியிருக்கிறார்.

நமக்கு கிடைத்த இன்னொரு தகவல், தே.ஜ கூட்டணியிலிருந்து ஓ.பி.எஸ்ஸும், டி.டி.வியும் விலகியிருப்பது வாக்குகளை பிரித்து விடும் என்ற அச்சத்தால் பி.ஜே.பி உண்மை நிலவரங்களை தெரிந்து செங்கோட்டையனை அழைத்துப்பேசியிருக்கிறார்கள்.

நிர்மலா சீத்தாராமன் தமிழர் என்பதால் செங்கோட்டையன் தங்கு தடையின்றி தனக்கு தெரிந்ததை தயக்கமில்லாமல் தெரிவித்து விட்டு வந்திருக்கிறார். முக்குலத்தோர்களின் பவர் பற்றி கவுண்டரான செங்கோட்டையன் சொன்னது டெல்லி மேலிடத்தை சிந்திக்க வைத்திருக்கிறது.

அதனால் தற்போது டெல்லி மேலிடம், கட்சியை சசிகலாவிடம் ஒப்படைத்து விட்டு செங்கோட்டையனை பொருளாளராக நியமித்து தேர்தலைச்சந்திக்க தயாராகி வருகிறது.

ஓ.பி.எஸ் மீது எப்போதும் ஒரு நல்ல அபிப்பிராயத்தை கொண்டுள்ள பிரதமர் மோடி அ.தி.மு.க தலைமைக்கு ஒரு நிழலாக ஓ.பி.எஸ்.ஸை நியமிக்கலாமா?என்று ஆலோசித்து வருவதாக உறுதியான தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே, அக்டோபர் 30 தேவர் ஜெயந்தியன்று அ.தி.மு.கவில் முக்கிய மாற்றங்கள் நிகழும் என்று டெல்லியில் பரபரப்பாக பேசி வருகிறார்கள். ■

## ஆசை வார்த்தை கூறி ரூ. 10 கோடி மோசடி...

# பெண் தொழிலதிபரை தட்டி தூக்கிய போலீஸ்..!




**திண்டுக்கல்லைச் சேர்ந்த மக்காச்சோள வியாபாரியிடம், ரூபாய் 10 கோடியே 75 லட்சம் மோசடி செய்த சேலத்தைச் சேர்ந்த பெண்ணை மாவட்ட குற்றப்பிரிவு போலீஸ் கைது செய்து சிறையில் அடைத்தனர்.**

கிராமத்து உணவு என்ற பெயரில் ஓட்டல் நடத்தி 10 கோடியைக் கணவருடன் சேர்ந்து சுருட்டியிருக்கிறார் அந்தப் பெண் என்ற அதிர்ச்சித் தகவல் இப்போது வெளியாகியுள்ளது.

திண்டுக்கல் கோபாலசமுத்திரம் பகுதியைச் சேர்ந்தவர் ராஜ்குமார். இவர் திண்டுக்கல் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் விவசாயிகளிடம் நேரடியாக சென்று மக்காச்சோளத்தை கொள்முதல் செய்து, அதனைப் பிற தொழில்நிறுவனங்களுக்கு விற்கும் தொழில் செய்துவந்தார்.

இவருக்கு, கடந்த 2022 ஆம் ஆண்டு சேலத்தைச் சேர்ந்த சரவணன் என்பவருடன் பழக்கம் ஏற்பட்டது. சரவணனின் மனைவி சங்கீதா. இவர்கள் சேலத்தில், மக்காச்சோளத்தை மதிப்புக்கூட்டல் செய்து கிராமத்து உணவு எனும் பெயரில் ஓட்டல் நடத்தி வருவதாகவும், வெளிநாடுகளுக்கு மக்காச்சோளத்தை ஏற்றுமதி செய்யும் நிறுவனம் நடத்திவருவதாகவும் கூறியுள்ளனர்.

அதை உண்மை என நம்பிய ராஜ்குமார், அவர்களுடன் கடந்த 2022 ஆம் ஆண்டு






எஸ்.பி பிரதீப்

முதல் வர்த்தகம் செய்து வந்தார். இந்நிலையில் மக்காச்சோளம் கொள்முதல் குறைந்ததால் சரவணன் நிறுவனத்துக்கு ராஜ்குமாரால் சரக்குகளை அனுப்ப முடியவில்லை.

இந்நிலையில், சரவணன் மனைவி சங்கீதா இனிப்பு வகை மக்காச்சோளத்தை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதாக ராஜ்குமாரிடம் தெரிவித்தார். ராஜ்குமார் தனக்கும் இனிப்பு வகை மக்காச்சோளம் வேண்டும் என்று சங்கீதாவிடம் கேட்டுள்ளார். அப்போது மக்காச்சோளத்தை வழங்கும் விவசாயிகளின் வங்கி கணக்கு விவரங்களை தருவதாகவும் கூறினார்.

அதற்கு சம்மதித்த ராஜ்குமார், விவசாயிகளின் வங்கிக் கணக்குகளாக அவர்கள் கொடுத்த 19 பேரின் எண்ணிற்கு ரூபாய் 28 கோடி வரை பணம் அனுப்பினார். அந்த முதலீட்டைப் பல தவணைகளில் மக்காசோளம்கொள்முதல் செய்துவந்தார்

இந்நிலையில் சங்கீதா கடந்த ஒரு வருடங்களுக்கு முன்பிருந்து மக்காச்சோளத்தை அனுப்பவில்லை. மக்காச்சோளம் அனுப்பும்படி ராஜ்குமார் கேட்கும் போதெல்லாம் ஏதாவது ஒரு காரணத்தை சொல்லி தட்டிக் கழித்து வந்துள்ளார். இதனால் ரூபாய் 10 கோடியே 73 லட்சத்து 67 ஆயிரத்து 906 பாக்கி இருந்தது. அந்தப் பணத்தைப் ராஜ்குமார் பலமுறை திரும்பக் கேட்டும் சரவணனும், சங்கீதாவும் கொடுக்காமல் ஏமாற்றி வந்து உள்ளனர்.

சந்தேகமடைந்த ராஜ்குமார் சேலத்திற்கு நேரில் சென்றார். அங்க சரவணன், அவரது மனைவி சங்கீதா ஆகியோர் பணம் அனுப்புவதற்கு மக்காச்சோள விவசாயிகள் என்று கொடுத்த 19 பேரின் வங்கிக் கணக்கு விவரங்களை வைத்து விசாரித்தார். அதில் தான் சரவணன், அவரது மனைவி சங்கீதாவின் தில்லுமுல்லு வேலைகள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. அந்த விசாரணையில், அந்த 19 பேரும் சரவணன், சங்கீதா தம்பதியிடம் வேலை பார்க்கும், ஊழியர்கள், டிரைவர், வீட்டுவேலை செய்பவர், செக்யூரிட்டிகளின் வங்கிக் கணக்குகள் எனவும், அவர்கள் மூலமாக சரவணனும், சங்கீதாவும் மோசடியாக பணத்தைப் பெற்று அனுபவித்துவிட்டு அதைத் திரும்பத் தராமல் இழுத்தடித்ததும் தெரியவந்தது.

இது குறித்து ராஜ்குமார் கடந்த ஜனவரி மாதம் திண்டுக்கல் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் பிரதீப்பிடம் இனிப்பு வகை மக்காச்சோளம் அனுப்புவதாக கூறி சங்கீதா 10 கோடிக்கு மேல் மோசடி செய்ததாக புகார் அளித்தார். புகாரின் பேரில் மாவட்ட குற்றப்பிரிவு டி.எஸ்.பி குமரேசன் தலைமையிலான போலீசார் சேலத்தை சேர்ந்த சங்கீதா மற்றும் அவரது கணவர் சரவணன் மீது கடந்த மாதம் மோசடி வழக்கு பதிவு செய்து சரவணன், அவரது மனைவி உட்பட 21 பேரை தேடி வந்தனர்.

இதில் கடந்த வாரம் தலைமறைவாக இருந்த சங்கீதாவை சேலத்தில் கைது செய்து திண்டுக்கல் மாவட்டம் அழைத்து வந்து விசாரணை நடத்தியதில் அவர்கள் செய்த மோசடி அம்பலமானது. அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி நிலக்கோட்டை சிறையில் அடைத்தனர். தலைமறைவாக உள்ள சரவணன் உள்ளிட்டவர்களை தீவிரமாக தேடி வருகின்றனர்.

உல்லாச வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு ரூபாய் 10 கோடி மோசடி செய்த சங்கீதா சோகத்துடன் சிறை கம்பிகளை எண்ணுகிறார். ■

நெல்லை | தமிழ்செல்வன்




# அம்மாக்களை மடக்கி உல்லாசம்...

# சிக்கிய மன்மத மாஸ்டர்...

**நெல்லையில், மாணவிகளுக்கு கராத்தே பயிற்சி அளிப்பதாகக் கூறி, பயிற்சிக்கு வரும் மாணவிகளின் தாயார்களை, ஆசை காட்டி மோசம் செய்ததாக கராத்தே மாஸ்டர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதுவரை 8 பெண்களை அவர் பாலியல் வன்கொடுமை செய்ததாகக் கூறப்படும் நிலையில், போலீசார் விசாரணையை தீவிரப்படுத்தியுள்ளனர்.**

நெல்லை மாவட்டம் சுத்தமல்லியை அடுத்த நரசிங்கநல்லூர் பொன்விழா நகரைச் சேர்ந்தவர் அப்துல் வகாப். கராத்தேவில் டிப்ளமோ பட்டம் பெற்ற இவர், நெல்லை டவுன் கோடீஸ்வரன் நகர் பகுதியில் கராத்தே வகுப்பும், பாளையங்கோட்டை கே.டி.சி. நகர் பகுதியில் துப்பாக்கி சுடும் பயிற்சி வகுப்புகளையும் நடத்தி வந்துள்ளார்.

இவரின் பயிற்சி மையங்களில் நெல்லை சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பள்ளி மாணவ மாணவிகள் படித்து வருகின்றனர். வெளியுலகிற்கு ஒரு கராத்தே மாஸ்டராகவும், பயிற்சி அளிக்கும் நபராகவும் தோற்றமளித்த இவர் பலரிடம் பாலியல் சேட்டை செய்தது தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

அப்துல் வகாப் தனது பயிற்சி மையத்திற்கு வரும் மாணவிகளின் தாய்களைக் குறிவைத்து தனது சில்மிஷ வேலைகளை அரங்கேற்றியுள்ளார். முதலில் அவர்களை நோட்டமிட்டு, அதில் சில பெண்களை தனக்கானவர்களாகத் தேர்ந்தெடுத்துள்ளார். பின்னர், சாமர்த்தியமாக அவர்களிடம் பேச்சுக் கொடுத்து, அவர்களின் செல்போன் எண்களைப் பெற்றுள்ளார். தொடர்ச்சியாக, இனிப்பான ஆசை வார்த்தைகளைக் கூறி, அந்தப் பெண்களை மயக்கி, தனது வலையில் வீழ்த்தி பாலியல் ரீதியாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளார். தொடர்ந்து அதனை வீடியோவாக எடுத்து அதனைக் காட்டி தொடர்ந்து பாலியல் தொல்லை கொடுத்ததோடு, அவர்களிடம் பணம், நகை ஆகியவற்றை பறித்து வந்ததாராம்.





இந்நிலையில், சுத்தமல்லி பகுதியில் உள்ள ஒரு டீக்கடையில் வேலை செய்யும் ஊழியரின் 13 வயது மகள், அப்துல் வகாப்பின் கராத்தே பயிற்சி மையத்தில் படித்து வந்துள்ளார். அந்தச் சிறுமியின் தாய், தினமும் காலையில் சிறுமியை பயிற்சி மையத்திற்கு அழைத்துச் சென்று வந்துள்ளார்.

அப்போது அப்துல் வகாப், அந்தப் பெண்ணின் செல்போன் எண்ணைப் பெற்று, பழகி வந்துள்ளார். சுமார் 4 ஆண்டுகளாக இவர்களின் பழக்கம் நீடித்து வந்ததாகக் கூறப்படுகிறது. இந்த தகவல் அந்தப் பெண்ணின் கணவரான டீக்கடை ஊழியருக்குத் தெரியவரவே, அவர் தனது மனைவியைக் கண்டித்துள்ளார். இதனால், சமீப காலமாக அந்தப் பெண் அப்துல் வகாப்புடன் பேசுவதைத் தவிர்த்து வந்துள்ளார்.

இந்நிலையில், சமீபத்தில் அந்தப் பெண்ணின் வீட்டுக்குச் சென்ற அப்துல் வகாப், நான் போன் செய்தால் ஏன் எடுப்பதில்லை என்று கூறி, அந்தப் பெண்ணைச் சரமாரியாகத் தாக்கியுள்ளார்.

மேலும், தான் அழைக்கும்போது தன்னுடன் வந்து தனிமையில் இருக்க வேண்டும் என்றும், இல்லை என்றால் நீ என்னுடன் உல்லாசமாய் இருந்த வீடியோக்களை வெளியிட்டுவிடுவேன் என்று அச்சுறுத்தும் தொனியில் கட்டளையிட்டுள்ளார்.

அதனால் அதிர்ச்சி அடைந்த அந்தப் பெண் சத்தம் போட்டுக் கூச்சலிடவே, அக்கம் பக்கத்தினர் அங்கு கூடினர். பொதுமக்கள் வருவதைக் கண்ட அப்துல் வகாப் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டார். உடனடியாக அந்தப் பெண் சுத்தமல்லி காவல் நிலையத்தில் அப்துல் வகாப் மீது புகார் அளித்தார். அதன் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். விசாரணையில் வெளியான தகவல்கள் போலீசாரையே திடுக்கிட வைத்தன.

இது குறித்து, காவல்துறையினர் அப்துல் வகாப்பின் மன்மத வலையில் சுமார் 8 பெண்கள் வரை ஏமாந்து இருப்பதும், சில பெண்கள் இவரால் பாதிக்கப்பட்டுத் தங்களது வாழ்க்கையை இழந்து இருப்பதும் தெரியவந்தது. மேலும், இதனை வெளியே தெரிவித்தால் சமுதாயத்தில் அவமானம், வெளியில் நடமாட முடியாது என்று கருதி, பாதிக்கப்பட்ட பெண்கள் பலர் அமைதி காத்ததும் தெரியவந்தது. இதையடுத்து சுத்தமல்லி போலீசார், வன்கொடுமை தடுப்புச் சட்டம் உள்ளிட்ட 4 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து, அப்துல் வகாபை இரவோடு இரவாகக் கைது செய்தனர்.

இவரால் பாதிக்கப்பட்ட மேலும் சில பெண்கள் தைரியமாக முன்வந்து புகார் அளிக்க வேண்டும் என்றும், அப்பொழுதுதான் மேற்கொண்டு கடுமையான நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் போலீசார் உறுதியளித்துள்ளனர்.

கராத்தே பயிற்சி அளிக்க வேண்டிய கராத்தே மாஸ்டர், காம பயிற்சி அளித்து இப்போது கம்பி எண்ணுகிறார்.

இந்த சம்பவம், மக்களை எச்சரிக்கையாக இருக்கவும், பயிற்சி மையங்கள் போன்ற இடங்களில் நடக்கும் பின்னணியை ஆராயவும் ஒரு எச்சரிக்கையாக அமைந்துள்ளது.

அப்துல் வகாபின் கதை, ஒரு மனிதனின் மறைந்த முகத்தை வெளிப்படுத்துவதோடு, பெண்களின் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு குறித்து சமூகத்திற்கு ஒரு முக்கிய பாடத்தையும் கற்பிக்கிறது.

பெண்களே உஷார்..! ■

# உங்களுடன் ஸ்டாலின் திட்டம்... மக்கள் போற்றும் மகத்தான சேவைகள்...

## ● முத்திரை பதிக்கும் மூன்று ஒன்றியங்கள்

**உங்களுடன் ஸ்டாலின் திட்டம்... மக்களிடம் செல்.. அவர்களோடு வாழ்... அவர்களை நேசி... என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கைப் பாதையில் தமிழ்நாடு அரசு வகுத்து வரும் பல்வேறு திட்டங்களில் மற்றுமொரு எடுத்துக்காட்டுக்காக உங்களுடன் ஸ்டாலின்.. என்ற புதிய திட்டத்தினை முதலமைச்சர் அறிவித்தார்.**

தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள், திட்டங்களை அவர்களின் இல்லங்களுக்கு அருகிலேயே சென்று வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நகர்ப்புறப் பகுதிகளில் நடக்கும் முகாம்களில் 13 துறைகள் 43 சேவைகள், ஊரகப் பகுதிகளில் நடக்கும் முகாம்களில் 15 துறைகள் 46 சேவைகள் மக்கள் எளிதாக பயன்பெறும் வகையில் தமிழ்நாடு முழுவதும் 15 ஜூலை 2025 முதல் நவம்பர் மாதம் 2025 வரை பத்தாயிரம் சிறப்பு முகாம்கள் அரசு சேவைகளை பொதுமக்களுக்கு மிக விரைவாகவும் எளிதாகவும்,வெளிப்படைத்தன்மையுடனும் கொண்டு சேர்ப்பதற்காக உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்கள் அனைத்து பகுதிகளிலும் நடைபெற்று வருகின்றன.

சாதி சான்று பெற, பட்டா மாற்றம் செய்ய, பென்சன் வாங்க, மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் தகுதிவாய்ந்த விடுபட்ட மகளிர் பயன் பெற, மருத்துவ காப்பீட்டு அட்டை பெற, ஆதார் அட்டையில் திருத்தங்கள் செய்ய, ரேசன் அட்டையில் முகவரி திருத்தம் செய்ய போன்ற பல கோரிக்கைகளுக்கு அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி அலுவலர்கள் நேரடியாக மக்கள் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வந்து தீர்வுகளை வழங்கி வருகின்றனர். மக்களும் திரளாக பங்கேற்று உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்களில் பயன்பெற்று வருகின்றனர்.

அந்த வகையில் மேற்படி திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி வரும் மாவட்டங்களில்




முக்கியமான மாவட்டம் கோவை மாவட்டம் என்றால் அதில் முதன்மையான இடத்தைப் பொள்ளாச்சி நகராட்சி மற்றும் பொள்ளாச்சி வடக்கு தெற்கு மற்றும் ஆனைமலை ஊராட்சி ஒன்றியங்களே பிடித்து வருகிறது. மூன்று ஒன்றியங்களும் பெரும்பாலான ஊராட்சிகளுக்கு முகாம்கள் நடத்தி முடித்திருக்கின்றன. கடைநிலை ஊழியர்கள் முதல் கலெக்டர் வரை பம்பரமாக சுற்றி பணியாற்றி வரும் இத்திட்டத்தில்






ஏராளமான மக்கள் பயன்பெற்று வருகின்றனர். குறிப்பாக ஆனைமலை மற்றும் பொள்ளாச்சி, பொள்ளாச்சி வடக்கு, பொள்ளச்சி தெற்கு ஆகிய மூன்று ஊராட்சி ஒன்றியங்களும் மேற்படி திட்டத்திற்கு நல்ல முன்னேற்பாடுகள், மக்கள் சிரமப்பட்டாத வகையில் சிறப்பு வசதிகள் என்று ஏற்படுத்தி கொடுத்துள்ளதோடு, பயனாளிகளுக்கு குடிதண்ணீர், தேநீர் மற்றும் கழிப்பிட வசதி போன்ற அனைத்து வசதிகளையும் மக்கள் மெச்சுகின்ற வகையில் செய்து வருகின்றனர்.

அதோடு முகாமில் பணியாற்றும் ஊழியர்களுக்கு மதியம் சிறப்பான உணவு ஏற்பாடு செய்து தருகின்றனர். சில முகாம்களில் ஆளுங்கட்சி நிர்வாகிகளால் பயனாளிகள் அனைவருக்குமே பிரியாணி விருந்து கொடுக்கப்பட்டு அமர்க்களப்படுத்தபட்டு வருகிறது. இந்த மகத்தான திட்டத்தில் அரசு அதிகாரிகள் ஊழியர்களின் சிறப்பான செயல்பாடுகள் ஒருபுறம் என்றால், மற்றொருபுறம் ஆளுங்கட்சி ஒன்றியச் செயலாளர்கள், பகுதி செயலாளர்கள் மற்றும் இதர நிர்வாகிகளின் மக்கள் போற்றும் மகத்தான சேவைகள் ஆகிய இரண்டு அம்சங்களும் மேற்படி திட்டத்திற்கு மெருகேற்றும் வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

குறிப்பாக ஆனைமலை ஒன்றியச் செயலாளர்களான கிழக்கு ஒன்றிய செயலாளர் யுவராஜ், மேற்கு ஒன்றிய செயலாளர் தேவசேனாதிபதி, வடக்கு ஒன்றிய செயலாளர் எஸ்,எஸ்.யுவராஜ் ஆகிய மூவரும் கட்சி தலைமையின் கட்டளைக்கேற்ப தங்களின் சக்திக்கு மீறியே மக்கள் பணியாற்றி வருகின்றனர் முகாம்களில் பயன்பெற வரும் மக்கள் எவ்வித சிரமமும் இல்லாமல் வந்து செல்ல தேவையான அனைத்து வசதிகளையும் சிறப்பாக செய்து கொடுப்பதில் கண்ணுங்கருத்துமாக செயல்பட்டு வரும் மூவரும் தங்களின் சொந்த பணத்தை முகாமிற்காக தாராளமாக செலவு செய்து வருகிறார்கள்.


அதேபோல் பொள்ளாச்சி தெற்கை எடுத்து கொண்டால் தெற்கு ஒன்றிய செயலாளர் கதிர்வேல், தெற்கு கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ்.என். காணியப்பன், தெற்கு மேற்கு ஒன்றிய செபலாளர் கமலக்கண்ணன் ஆகியோரின் பணிகளும் சூப்பர் ரகம் என்று தான் சொல்ல வேண்டும். அதில் கதிர்வேல் ஒருபடி மேல் என்று கூறுகின்ற வகையில் முகாமிற்கு வரும் வயோதிகர்களை கூட்டிக் கொண்டு போய் விட சொந்த வாகனம் ஏற்பாடு செய்து கொடுத்தும், சிலருக்கு பஸ்ஸிற்கு பணம் கொடுத்தும் மக்களின் வெகுவான பாராட்டுகளைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

அதேபோல் பொள்ளாச்சி வடக்கு ஒன்றியமும் தாங்களும் ஒன்றும் சலைத்தவர்கள் அல்ல என்கிற ரீதியில் மக்கள் பணியில் பட்டையை கிளப்பி விட்டனர். அதிலும் வடகிழக்கு ஒன்றிய செயலாளர் மருதவேல், வட மேற்கு ஒன்றிய செயலாளர் அய்யம்பாளையம் ராசு,











வடக்கு ஒன்றிய செயலாளர் ரமேஷ் ஆகியோர் அசத்தி விட்டனர் மக்கள் சேவையில். இதில் ரமேஷ் தான் அரசு ஊழியர்களுக்கு மட்டும் அல்லாமல், ஒட்டுமொத்த மக்களுக்கும் பிரியாணி விருந்து கொடுத்து அசத்தியவர். மேற்படி மூவரது செயல்பாடுகள் பாராட்டுக்குரியது என்று சொன்னால் அது மிகையாகாது. இப்படியாக மேற்படி திட்டத்தை வெற்றி பெறச் செய்திட அரும்பாடுபட்டு வரும் தி.மு.க ஒன்றிய செயலாளர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் தாண்டி பார்த்தால் திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளர் இல, பத்மநாபன் மற்றும் கோவை தெற்கு மாவட்ட செயலாளர் தளபதி முருகேசன், பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரசாமி, டாக்டர் மகேந்திரன் போன்றோரின் உழைப்போ இத்திட்டத்திற்கு மென்மேலும் சிறப்பு சேர்ப்பதாக அமைகிறது என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

மேலும் கோவை மாவட்ட ஆட்சியர் பவன் குமார், கூடுதல் ஆட்சியர் ஊராட்சிகளின் உதவி இயக்குநர் கமலக்கண்ணன், மாவட்ட வருவாய் அலுவலர், ஆனைமலை ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராதாகிருஷ்ணன், குழந்தைசாமி, பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரத்னகுமார், ரவி, பொள்ளாச்சி வடக்கு ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் சுபா, சதீஸ்குமார் ஆகியோர் ஒவ்வொரு முகாம்களிலும் மக்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் சிறப்பாக செய்து கொடுத்து மிகச்சிறப்பான முறையில் திட்டத்தை மக்களிடம் கொண்டு சேர்த்தனர். அவர்களுடன் அனைத்து ஊராட்சி செயலாளர்களும் நேரம் காலம் பார்க்காமல் கடுமையாக உழைத்து வருகின்றனர். அதோடு பொள்ளாச்சி ஆனைமலை வட்டாட்சியர்கள் மற்றும் அனைத்து வருவாய் அலுவலர்கள், மின்வாரிய அதிகாரிகள் – ஊழியர்கள் என அனைத்து துறையைச் சேர்ந்தவர்களும் தங்கள் தங்கள் பணிகளை சிறப்புடன் செய்து வருகிறார்கள்.

அதில் ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் சிவப்பிரகாஷ் பாபு, பொள்ளாச்சி வடக்கு ஊராட்சி ஒன்றியத்தில் சாஜு நாகராஜ், பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றியத்தில் ஜாஸ்பர் கார்த்திகேயன், போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். ஆக மொத்தத்தில் ஆனைமலை, பொள்ளாச்சி வடக்கு மற்றும் தெற்கு ஆகிய மூன்று ஊராட்சி ஒன்றியங்களும் தமிழ்நாடு அரசின் உங்களுடன் ஸ்டாலின் என்னும் முத்தான திட்டத்தில் முத்திரை பதித்து வருவது தான் நிதர்சனமான உண்மை..! ■

Owned, Published and Printed by: S.P. RAMANATHAN, at No. 3-224/1, Musuvanuthu, Dindigul, Tamilnadu – 624619. and Printed at CHENNAI OFFSET PRINTERS, No. 19/1,21/2, Kitabathkhan Bahadur Street, Ellis Road, Chennai – 600002. EDITOR: S.P. RAMANATHAN
All rights reserved. Legal jurisdiction Chennai city court only. Nothing in Paraparappu Cheithi is intended to defame any person. But expressed in faith, pursuit of truth and public good.

நாமக்கல் | யுவபாரதி

# தங்கமணிக்கு எதிராக மாஜி எம்.எல்.ஏ.க்கள்..!

## மாவட்ட செயலாளர் V/s நகர செயலாளர்...

**அ.தி.மு.க வை ஒருங்கிணைக்க எடப்பாடிக்கு 10 நாள் கெடு வைத்த செங்கோட்டையனின் கட்சிப் பதவிகளை எடப்பாடி பழனிச்சாமி பறித்திருக்கும் நிலையில், நாமக்கல் மாவட்டத்தில் முன்னாள் அமைச்சரும் அமைப்புச் செயலாளருமான பி.தங்கமணிக்கு எதிராக அ.தி.மு.க முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் அணி திரட்டி வருவதும் பேசுபொருளாகி இருக்கிறது.**

நாமக்கல் மாவட்டத்தில் எடப்பாடி பழனிச்சாமியின் பிரச்சார பயணம் குறித்து தலைமை அலுவலகத்தில் கடந்த வாரம் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. முன்னாள் அமைச்சரும், மாவட்டச் செயலாளருமான பி.தங்கமணி தலைமையில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில், முன்னாள் அமைச்சர் சரோஜா, பரமத்திவேலூர் எம்.எல்.ஏ வான சேகர், முன்னாள் எம்.எல்ஏக்கள் சரஸ்வதி, கலாவதி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்ட நிலையில், நாமக்கல் நகரச் செயலாளரும், முன்னாள் எம்.எல்.ஏவுமான கே.பி.பி.பாஸ்கரும், அவரது ஆதரவாளர்களும் கலந்து கொள்ளாமல் புறக்கணித்தனர்.

அண்மையில் அ.தி.மு.கவில் இணைந்த சேந்தமங்கலம் அ.தி.மு.க முன்னாள் எம்.எல்.ஏ.வான சி.சந்திரசேகரனும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. இந்தக் கூட்டம் நடப்பது குறித்து முறையாக தகவல் தெரிவிக்காததே அவர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளாததற்குக் காரணம் என்று சொல்லப்படும்



தங்கமணி தலைமையில் ஆலோசனை கூட்டம்

நிலையில், ஆனால், அதுமட்டுமே காரணம் கிடையாதாம்.

நாமக்கல் மாவட்ட அ.தி.மு.கவை நமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு என இரண்டாகப் பிரிப்பது உள்ளிட்ட பல விஷயங்கள் தொடர்பாக பாஸ்கருக்கும், தங்கமணிக்கும் இடையே நீண்ட காலமாக பனிப்போர் நடக்கிறது. அதனால், ஆட்சியில் இருந்தபோதே பாஸ்கர் விவகாரத்தில் தங்கமணி தலைகாட்ட மாட்டார். கட்சி அறிவிக்கும் போராட்டங்கள் எதுவாக இருந்தாலும் மாவட்டத்தின் பிற பகுதிகளில் தான் நடக்கும். மாவட்டத் தலைநகரான நாமக்கலில் நடக்காது. இத்தனை நாளும் வெளியில் தெரியாமல் இருந்த இந்தப் புகைச்சல் இப்போது வெளியில் தெரிய ஆரம்பித்திருக்கிறது.

சேந்தமங்கலம் முன்னாள் எம்.எல்.ஏவான சந்திரசேகரன் 2021ல் இரண்டாவது முறையாக வாய்ப்புக்



சரோஜா



சேகர்



சந்திரசேகர்

கேட்டார். ஆனால், தங்கமணி அவருக்கு சிபாரிசு செய்யவில்லை. அதனால், கட்சியைவிட்டு விலகி சுயேச்சையாக போட்டியிட்ட சந்திரசேகரன், அ.தி.மு.கவை தோற்கடித்தார். மீண்டும் இப்போது அ.தி.மு.கவுக்கு திரும்பியுள்ள சந்திரசேகரனுக்கு தங்கமணி மீதான தனது பழைய கோபம் தீர வில்லை. அதனால், அவரும் ஆலோசனைக் கூட்டத்தைப் புறக்கணித்திருக்கிறார் என்றனர் கட்சியினரே.

இதுதொடர்பாக முன்னாள் எம்.எல்.ஏ வான பாஸ்கரிடம் கேட்டபோது, நாமக்கல் தொகுதி ஆலோசனைக் கூட்டம் நடத்தி யபோது, மாவட்டச் செயலாளர் என்ற முறையில் தங்கமணிக்கு அழைப்பு விடுத்தோம். ஆனால், அவர் வரவில்லை. அது போல் பொதுச்செயலாளர் நாமக்கல் வழியாக திருச்சி சென்றபோது, நாமக்கல் மாவட்ட அ.தி.மு.க அலுவலகத்தில் இருந்த தங்கமணி, அவரை வரவேற்க வராமல் புறக்கணித்தார். கடந்த 4 ஆண்டுகளில் மாவட்டக் கழகத்தின் சார்பில் நாமக்கல்லில் ஒரு ஆர்ப்பாட்டம் கூட நடத்தப்படவில்லை.

நாமக்கல் அ.தி.மு.கவில் தங்கமணி எப்படி வளர்ந்தாரோ அதுபோலத்தான் நானும் படிப்படியாக வளர்ந்திருக்கிறேன். ஆனால், நாமக்கல்லில் நடக்கும் எந்த நிகழ்ச்சியிலும் எனது பெயரை போடுவதில்லை. ஆனால், நேற்றைக்கு மாநிலப் பொறுப்புக்கு வந்த ஒருவரின் பெயரைப் போடுகிறார்கள். இதுபற்றியெல்லாம் நாங்கள் பொதுச்செயலாளரை சந்தித்துப் பேசிவிட்டு வந்த பிறகு தான் பிரச்சினை இன்னும் பெரிதாகியுள்ளது என்றார். முன்னாள் எம்.எல்.ஏ வான சந்திரசேகரனோ, கூட்டம் தொடர்பாக எனக்கு மாவட்ட அலுவலகத்தில் இருந்து எந்த அழைப்பும் வரவில்லை. அதனால் நான் பங்கேற்கவில்லை. பொதுச்செயலாளர் எங்கள் தொகுதிக்கு வரும்போது சிறப்பான முறையில் வரவேற்பு தரப்படும். பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி முதல்வராக வரக்கூடாது என தங்கமணி நினைக்கிறார். தங்கமணியின் அனுகுமுறையால் 2021ல் கொங்கு மண்டலத்தில், நாமக்கல் மாவட்டத்தில் மட்டும் தான் குறைவான இடங்களில் அ.தி.மு.க வெற்றி பெற்றது என்றார்.

இதுதொடர்பாக தங்கமணியின் கருத்தை அறிய அவரை பலமுறை தொடர்பு கொண்டும் அவர் நமது அழைப்பை ஏற்கவில்லை. இறுதியாக அவரது உதவியாளர் சேகரிடம் இதுபற்றி பேசினோம். அவர், மாவட்ட அலுவலகத்தில் இருந்து தான் அனைவருக்கும் வழக்கமாக தகவல் அளிப்பார்கள். எனவே, யாருக்கும் தகவல் சொல்லாமல் இருந்திருக்க வாய்ப்பில்லை. முன்னாள் அமைச்சர் தங்கமணி அறுவை சிகிச்சை செய்திருப்பதால், அவர் போனை எடுத்துப் பேசாமல் இருந்திருக்கலாம் என்றார்.

எதிர்க்கட்சி வரிசையில் இருந்து கொண்டு இப்படி ஆளாளுக்கு குறுநில மன்னர்களைப் போல் அரசாட்சி நடத்திக் கொண்டிருந்தால் எடப்பாடி பழனிச்சாமி என்றைக்கு மக்களை காப்பது.? தமிழகத்தை மீட்பது..? என்று கேள்வி எழுப்புகின்றனர் ரத்தத்தின் ரத்தங்களும், அரசியல் நோக்கர்களும். ■

## தங்கமணிக்கு எதிராக அ.தி.மு.க நகரச் செயலாளர்...



கே.பி.பி.பாஸ்கர்

நாமக்கல் மாவட்ட அ.தி.மு.க என்றால் அது முன்னாள் அமைச்சர் தங்கமணி தான். ஒருவகையில், இ.பி.எஸ்ஸுக்கு சம்பந்தி உறவுமுறைக்காரர் என்பதால் அ.தி.மு.கவில் தனித்த செல்வாக்குடன் இருக்கும் அவருக்கே நாமக்கல்லில் ஒருவர் சவால்விட்டுக் கொண்டிருக்கிறார் நாமக்கல்அ.தி.மு.க நகர செயலாளரும் முன்னாள் எம்.எல்.ஏவுமான கே.பி.பி.பாஸ்கர்.

தங்கமணியை தாண்டி எதுவும் நடக்காது என்பது தெரிந்தும் பழனிசாமியின் நேரடி தொடர்பில் தனி ரூட்டில் அரசியல் செய்து வருகிறார் பாஸ்கர். இதை ஏற்கமுடியாத தங்கமணி தரப்பு, பாஸ்கரை ஓரங்கட்டுவதற்கான வேலைகளைச் செய்து வருகிறது. இதுதொடர்பாக நம்மிடம் பேசிய நாமக்கல் அ.தி.மு.கவினர் சிலர், மாவட்ட அ.தி.மு.கவில் தங்கமணி வைத்தது தான் சட்டம் என்றாலும், நாமக்கல் நகர அ.தி.மு.கவில் பாஸ்கர் சொல்வது தான் நடக்கும். இதைத்தான் தங்கமணி தரப்பால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. நாமக்கல் மாவட்ட அ.தி.மு.கவை இரண்டாகப் பிரித்து தன்னையும் மாவட்டச் செயலாளராக்க வேண்டும் என பாஸ்கர் வலியுறுத்தி வருகிறார். தங்கமணி இதற்கு குறுக்கே நிற்கிறார். இதனிடையே, 2026ல் மீண்டும் நாமக்கல்லில் போட்டியிடுவதற்கான வேலைகளில் இறங்கி இருக்கிறார் பாஸ்கர். ஆனால், இவருக்குப் போட்டியாக மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளரான தொழிலதிபர் ஸ்ரீதேவி மோகன் என்ற மோகனை தயார்படுத்தி வருகிறார் தங்கமணி. இது தெரிந்ததில் இருந்தே தங்கமணி பங்கேற்கும் நிகழ்ச்சிகளை பாஸ்கரும் அவரது ஆதரவாளர்களும் புறக்கணித்து வருகிறார்கள் என்றார்.